பதிவு எண் 2041 மகாத்மா காந்தி வாழ்க. கள்ளப்பிரதி விலை அணா ஒன்பது

குடியரசு

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]

வியாபாரிகள் விளம்பரம் அங் 1.க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1.க்கு ரூ. 2.
தனி விசிதமும் உண்டு.

மாலை 2 | ஞாயிற்றுக் கிழமை, அக்ஷய-வரு மாசி-மீ 30-உ (13—3—27) | மலர் 46.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

பார்ப்பனரின் தன்னல நோக்கம்

பார்ப்பனர்களும் புரோகிதர்களும் நிறைந்த இந்நாட்டில், பிரிட்டிஷ் கொள்கைக்கும் நியாயத்துக்கும் ஒவ்வாத விஷயங்கள் அநேகம் இருந்து வருகின்றன. அவைகளில் ஒன்று, பார்ப்பனப் புரோகிதர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு எவ்வித வேலையுஞ் செய்யாமல், அவர்களிடமிருந்து அதிக வருமானம் பெறுவதே. அறிவாளிகளுள்ள எத்தேசத்திலும் வேலை செய்யாமல் பணம் (கூலி) கேட்பது தவறென்றே யுணரப்படும். மனிதனுடைய வாழ் நாள் அவன் பிறப்பிலேயே நிச்சயிக்கப்படுகிற மதம்பரவியுள்ள இத்தேசத்தில் மனிதத்துவத்துக்கொவ்வாத எத்தனியமும் வெளிப்படையாகச் செய்யப்படுவதல்லாமல், ஜனங்களும் மதத்தின் பேரால் இவற்றைச் சகித்துக்கொண்டேவருகிறார்கள் ஆகவே இத்தேசத்தில் பரம்பரைப்புரோகிதர்களும், பரம்பரைத்தச்சர்களும் இருந்து வருவதைப் பார்க்கிறோம். பார்ப்பனரல்லாதார்கள் காலத்தில் விழித்துக்கொள்ளாவிட்டால் வருங்காலத்தில் பரம்பரை சட்டசபை அங்கத்தினர்களும் ஏன் வந்துவிடமாட்டார்கள்? புரோகிதர்கள்பார்ப்பனரல்லாதாருக்கு வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் அவர்கள் பார்ப்பனரல்லாதாரிடமிருந்து வருமானம் பெற உரிமையுடனே பிறந்திருக்கிறார்களென்றுசாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. இப்பரம்பரை பாத்தியதையை ஒரு பிரிவாய் ஜ கோர்ட் நீதிபதிகூட தமது ஜட்ஜ்மெண்டில் ஒப்புக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. இந்த ஜட்ஜ்மெண்டின் (தீர்ப்பின்) பலத்தைக்கொண்டு அவர்களை அழைத்தாலும் அழையாவிட்டாலும் இந்த புரோகிதர்கள் தங்கள் வருமானத்தைப்பெற்றுக்கொள்ள பம்பாய் பார்ப்பனரல்லாதார் மீது வியாஜ்ஜியந்தொடர ஆரம்பித்துவிடலாம். எந்த நாகரீகமடைந்த தேசத்திலும் இதை விடத்தண்டம் இருந்ததாக—இருப்பதாகத் தெரியுமா? வேதங்கள் மிகவும்பரிசுத்தமானவையாம்! பார்ப்பனரல்லாதார் அவற்றைப் படிக்கக்கூடாதாம்! பசுக்களையும், பார்ப்பனர்களையும் பாதுகாத்தவரும், மாத்தியஎகாதிபத்தியத்தையே ஏற்படுத்தியவருமான சிவாஜியையுங்கூட அவர்கள் சுத்தமில்லாதவனெனக் கருதினார்கள். மாத்தியர்கள் இதோப தேசத்தையும் அமார்கோஷ் என்ற புத்தகத்தையுமே படித்து திருப்தியடையவேண்டுமாம். ஏனையோர் கடவுளின் பாஷையை அணுகவும் படாதாம்.

சமத்துவமும், மனிதனின் கௌரவமும் பார்ப்பன மதத்துக்குத் தெரியவேதெரியாது ஆனால் அம்மத விதிகள் எல்லாம்பார்ப்பனர்களின பெருமையையும் செழிப்பையும் பெருக்குவதற்காகவே எற்பட்டிருக்கின்றன. மேனாட்டில் மத்தியகாலங்களில் கிறிஸ்தவ மதம் இருந்தது போலவே இப்போது பார்ப்பனர் மதம் இங்கிருக்கிறது. மதநூல்களை நெருப்பில் போட்ட ஹாண்ட் போன்ற ஒருவராவது மார்டின் லூதர் போன்ற ஒருவராவது பார்ப்பனீயத்தை ஒழிக்க முன்வரவேண்டும். பூனூலிலுள்ள பார்ப்பனரல்லாதாரின் சத்திய சுதக இயக்கத்தின் பிறப்பும், நோக்கமும் ஹரிட் இயக்கத்தைப்போன்றே இருக்கிறது. நியாயமான வழியில் பார்ப்பனர்கள் நடந்துகொள்ளாவிட்டால் போப்புகளின் கதியையே அவர்களுமடைவார்கள். பார்ப்பனரல்லாதார் விழித்துக்கொண்டனர். புரோகிதர்களின் ஆதிக்கத்தினின்றும் விடுபட விரும்புகிறார்கள். ஆனால் பார்ப்பனர்களும் புரோகிதர்களும் மறுக்கிறார்கள். தங்கள் மந்தையிலேயே ஆட்டுக்கூட்டம் இருக்கவேண்டுமென்று நினைக்கின்றனர். உண்மையை அறிந்துகொண்ட ஆடு ஒன்று இவர்களுடைய மந்தையினின்றும் பிரிய எண்ணமுகொண்டுவிட்டால் அதோகதிதான்! மறுநாள் அவ்வாடு நீங்கிஸ்தலத்துக்குக்கொண்டு போகப்பட்டுவிடும். அது செய்த பாவத்திற்கெல்லாம்பரிகாரம்பண்ணவேண்டும். ஏழைப் பார்ப்பனரல்லாதானே தான் இருப்பது பிரிட்டிஷ் அரசாங்கத்திலா, அல்லதுபழைய பிஷ்வா அரசாங்கத்திலா ஏன்று ஆச்சரியப்படுகிறான். சுயராஜ்யத்துக்காகப் பாடுபடும் இந்நாளில் கௌரியா அதீதிக்காகப் போராடும் இந்நாளில், தன்னிஷ்டப்படி தேவபூஜை செய்ய உரிமை வழங்க மறுப்பதும், தன் வீட்டில் தானே அதிகாரியாய் இருந்துவரத் தடைசெய்வதும், புரோகிதர் மூலமாய் பூஜை செய்யாததற்காக பணம் கொடுக்கும் படித்துன்புறுத்துவதும் சகிக்கக்கூடிய சம்பவங்களோ? ஆனால் இந்தப்பார்ப்பன ராஜ்யத்தில்அநியாயமோ,மனிதத்துவமின்மையோமதத்தின் பேரால்எல்லாம் ஒழுங்குதான். இம்மத வியாபாரிகளிடமிருந்து இந்தியா என்றைக்கு விடுதலையடையப் போகிறது? அல்லது நியாயவழியில் நிலைக்க என்றைக்குப் பார்ப்பனர்கள் கற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

நியாயக்கொள்கையை இந்தியா அனுசரிக்கும் படிக்கும், புரோகிதர்களின் ஆதிக்கத்திலிருந்து பார்ப்பனரல்லாதாரைவிடுவிக்கவும் ஒரு சாதாரணமானமசோதாவை இந்திய சட்டசபை சங்கத்தினரான ஸ்ரீமான் எ. பி, லத்தே (புதிய சீர்திருத்த சட்டசபை முதற்பகுதியில்) கொண்டுவந்தார். அனால் அந்தோ! அதன் கதியென்ன? பார்ப்பன பிபரல்களில் (மிதவாதிகளில்) முக்கியமானவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து மசோதாவுக்கு எதிரிடையாயிருந்தார்கள். பார்ப்பனீய விரோதமான இம்மசோதாவுக்கு விரோதமாக லிபரல் (மிதவாதிகள்)கட்சிப் புரோகிதராகிய ஸ்ரீமான் வல்லிமான் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரும் அவருடைய சீடரான கபர்தேயும் எதிர்த்து நின்றார்கள், ஒரு வேஷியும் செய்யாமல் பருப்பு பாயாசத்துடன் செழுமையாய் சாப்பிட்டுக்கொண்டு வரும் சாஸ்திரி பார்ப்பரை ஜாதிகள் அனுசரிக்கும் மதம் அபாயத்திலிருந்ததைக் கண்டவுடனே மார்லியின் தாராளக் கொள்கைகளும் கிளாஸ்டனின் தாராளக்கொள்கைகளும் எங்கேயோ போய்விட்டன. அந்நியராகிய பிரிட்டிஷாருக்கு விரோதமாய் அநுசரிக்கவேண்டிய தாராள நோக்கக்கையெலலாம் இத்தகைய தங்கள் சுயநல காரியங்களுக்கு ஆபத்து வரும்போது கவனித்துக்கொண்டிருக்க முடியாதுதான். சமூகமுன்னேற்றத்திற்காகாமான இம்மசோதாசம்பந்தமாய்பிற்போகாய் தான் நடந்துகொண்டதற்கு காலஞ் சென்ற ஸ்ரீமான் கோகலேயின் சீடரும், எல்லாருக்கும், எவ்வழியிலும் சமத்துவமும் சுதந்திரமும் வழங்கவதையே கொள்கையாயுள்ள இந்திய ஊழியர் சங்கத்திற்குத் தலைமை வகித்து நடத்திவருபவருமான ஸ்ரீமான் சாஸ்திரியார் ஜன நாயக முறையில்முன்னேறி வரும் இந்தியாவுக்குச் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்,கௌரியா முடிவைப்பற்றி அவர் ஸீளமாயும் சப்தமிட்டும அலங்காரமாய் ஆங்கிலத்தில் பேசுகிறார். ஆனால் இங்குள்ளபார்ப்பனரல்லாதார் கௌரியாவைப்பற்றி என்ன பேசுகிறார்,செய்கிறார்? இதைப்பற்றி அவர் நமக்கு அனுகூலமாய் நடந்திருந்தால் லட்சக்கணக்கான ஜனங்கள் இன்று தத்தம் வீடுகளில் தம் இச்சைபோல் இருந்துவரஏற்பட்டிருக்குமே. ஆனால் பார்ப்பனர்கள் தேச சரித்திரங்களை சரியாய்ப் படிக்க மறுக்கிறார்கள். ஒருவருக்கொருவர் கூடிவாழ்வதை உயர்வு தாழ்வு தடுத்துவரும் ஒரு தேசத்தில் ஜனநாயகத்தத்துவம் விருத்தியடையாது என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ளுகிறார்களல்லர். பிரான்சின் அரசர்களைப்போல் புதியகாய் அவர்கள் ஒன்றும் கற்றுக்கொள்வதுமில்லை. பழய கோட்பாடுகளொன்றையும் அவர்கள் மறப்பதுமில்லை. அவர்கள் காலத்தில் தங்களைத் திருத்திக்கொள்ளாமற்போனால் அவர்களடைவது அதோகதிதான். பார்ப்பனரல்லாதாராகிய நாம் இந்த சுதேசிய அந்நியர் கோட்பாடுகளை மூடத்தனமாய் இன்னும் நம்பியிருக்கக்கூடாது. மதப்பற்றுள்ள ஜனங்களிடம் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டவே அவர்கள் விரும்புகிறார்கள். கூடுமானால் வர்ணச்சிரம தர்மத்தையும் மறுபடியும் கொண்டுவரப் பார்க்கின்றார்கள். அப்போது முற்காலம் போல் பார்ப்பனர்கள் இப் பூமியில் கடவுளர்களாக விளங்கலாமன்றே! ஜாதி விதியாசத்தை ஒழிக்கவேண்டுமென்றிறபோதெலலாம் பார்ப்பன ஆதியல் வாதிகள் பயப்படுவதையும் நாம் பார்த்திருக்கிறோம். ஜாதி விதியாசத்தை போக்க அவர்கள் விரும்பமாட்டார்கள், ஜாதியே அவர்கள் உயிர். எப்படியும் ஜாதி இருந்தே தீரவேண்டும்.மற்றவை எது ஒழிந்தாலும்பாதகமில்லை. கோகலேயின் தாராளஉடையை யணிந்து விளங்கும் "ஸைட் ஹானரபிள்" சாஸ்திரியும் காலம் வரும்போது பின்வாங்கிவிட்டார். தாராள நோக்க சங்கத்தில் தலைமை வகிக்கும் சாஸ்திரியாரின் நிலைமையே இவ்விதமானால் மற்ற சிறு தெய்வங்களைப்பற்றிக் கேட்பானேன். ஒரு அபாயம் வருமபோது இவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள். ஆகவே மருந்து நம் கைபிலேயே இருக்கிறது. அதாவது அவர்களிடமிருந்து அறவே பிரிந்து நாம் தாராள வழியில் வேலை செய்யவேண்டும். நாம நமக்கு கீழுள்ள ஜாதியாரை முன்னேற்றப் பாடுபடவேண்டும். நாமும் அவ்விதமாய்விட்டால் ஊழ் நம்மையும் விட்டது.

எ. பொ. கிருஷ்ணன்.

பாக்கியம் எங்கிருக்கிறது?

லட்சுமிகளிடம்

லட்சுமி எங்கே? விஷ்ணுவின் மார்பில்
விஷ்ணுவெங்கே? மேனாடு போய்விட்டார்.

(27—2—27-ந்தேதி தொடர்ச்சி)

[தைவஸ்லிய சாமியார் எழுதுவது]

எந்த சக்தியால் எப்பொருளால் எதன் ஏதுவால் இவ்வையகம் தோன்றியதோ அதற்கு ஜகத்பிதாவாகிய ஸர்வேஸ்வரனே இந்த ஜகத்திற்குப் பிரதம ஆச்சாரியன். அவரது திருவருள் பெற்று மகிழ்ந்த மகரிஷிகள் நமக்கு விதித்ததும் உபதேசித்ததுமான உண்மைகளை மறைத்தும் நழுவவிட்டும், தனக்கு கஷ்டமில்லாதும், தற்காலம் தங்களுக்கு நன்மை பயக்கக்கூடியதுமான விஷயங்கள் அருவருக்கத்தக்கவையாயிருந்தாலும்—சாஸ்திர யுக்தி நன்மை முதலியவைகளுக்கு விரோதப்பட்டு அதனால் தேசமும், சமூகமும், கீழ்மக்களும் கவலையற்று காம செய்யும் கர்மங்களுக்கு நம் கையங்கள் தலைசாய்க்காமல் மேனாடு போய்விட்ட தன்மையை முன்னியாசத்தில் சொன்னோம்.

அநேக காலமாக கடவுள் பல சந்தர்ப்பங்களில் நம் நாட்டில் அவதாரம் செய்து மனிதன் நடக்கவேண்டிய தர்மங்களையும், கடமைகளையும் உபதேசித்தும் நடந்தும் காண்பித்தார். அவைகளைத் தெரிந்து பின் பற்றின ரிஷ்யர்கள் அவதாரபுருஷர்கள் உபதேசித்ததை ஏட்டில் எழுதி வைத்தார்கள். பின் வந்த பண்டிதர்களும், குருஸ்தானங்களும் அதன் உண்மைகளை ஜனக்கூட்டத்தில் சேர்க்காமல் மற்றவர்கள் - தெரிந்துகொள்ளவும் கூடாதென்றும் அரசாங்கயினரை மகிழ்த்தும், தாங்களும் உண்மைகளை உள்ளவாறு தெரிந்துகொள்ளாமல் தங்கள் சௌகரியங்களுக்கு எதிதனைச் செய்யவேண்டுமோ அதையதைச் செல்லி தங்கள் முன்னணிக்கும் சுகத்திற்கும் வேண்டிய பிரகாரம் திருத்திக் குரு பூசையும், ஆராதனையும், படையலும், பல்காரங்களும், அலங்காரமும், அட்டம்விழுதலும் ஏற்படுத்தி "பெருமாள் சேவை இன்று விசேஷம்" "ஈஸ்வரன் சேவை இன்று சந்தடியிலாமல் செய்தோம்," "நாளைக்காலையில் வந்து விடுங்கள் பெருமாள் அலங்காரம் விசேஷமாயிருக்கும," "வடையும்பொங்கலும்நெய்யிலேயசாத்துவோம்" என்றதாக இப்போப்பட்ட விஷயங்களையே அர்ச்சகர்களும் கும்பிட வந்தவர்களும் பேசி காலத்தை வீணாகி அறியாமையை விர்த்தி செய்து தங்கள் லௌகீகக்காரியங்களில் ஈடேறுதபோது இன்னும் கடவுளுக்கு அபிஷேகம்செய்து அவர்பேரில்குற்றஞ்சொல்லி சடங்கு, சாந்தி, ஓமம், மந்திரம் என்னும் பாப்பனன் பிழைப்பிற்கு பணத்தை பாழ் பண்ணி பார்ப்பானுக்கு பூரி தக்ஷணை கொடுத்து வந்தநின்பலனுய் குடும்பம் கடனில் பட்டு வருத்தம்வந்து வியாதியடைந்து மரணசமயத்தில கடவுள் பேரைச்சொல்லவும் கடனையடையவும் தெவ்வாரம், பாகவதம் வைகுந்த அம்மானை இவைகளைப்படிக்கிறார்கள். இதைத்தான் ஆசாரியர்களும், குருக்களும், சாஸ்திரிகளும் நம் தேசத்திற்குக்கற்றுக்கொடுத்தார்களே ஒழிய கழுதையையும் குரங்கையும், வேடனையும், ராட்சதனையும், சகோதரனுகத் தழுவிய சமத்துவத்தை நம் தேசத்திற் பாப்ப முற்படவில்லை. இச் சமத்துவத்தையல்லவா நம் அவதார புருஷர்கள் நடத்திக்காண்பித்தார்கள். சத்தியமும், தர்மமும் எங்கு நில நிற்குமோ அங்கே கடவுளின் சக்தி வியாபிக்கும, அப்பொழுதுதான் நம்மைத் தூண்புறுத்தும் கடைகள் விலகும். தர்மங்களுக்கு மாருக கர்மம்செய்கையிலும் ஜாதியாசாரங்களில் குறுகிய புத்தியோடு அநாகரீக முறையில் அன்னியரை ஹிம்சிப்பதிலும் நாம் கைக்கொள்ளும் முறைகள் தப்பாகவும பாவமாகவும் இருந்துவருகிறது. தைத்தெரிந்த பெரியோர்களும் பேசுவதே இல்லை. அநேக காலமாக இத்தப்பிதங்களை ஓழுங்கு படுத்தாமல் சரித்த ஞாயத்திலும் நொண்டிச் சாகிலும் இடங்கொடுத்தே வந்திருக்கிறார்கள்? இப்பொழுதும் அப்படியே தீண்டாமை சமூகத்தையழித்து விடுமென்று தெரிந்தும் அதைப்பற்றி முக்கியமானவர்கள் பகிங்கமாக என்ன பிரயத்தனப்படுகிறார்கள்? இவை தொன்று தொட்டே நம் தேசத்தில் வந்த சாபாடு போலும்! மாதத்தின் கீழிருந்து சங்கியாகி சொல்லுகிறான் "தன்னிடம உலகத்தையும், உலகத்தினிடம் தன்னையும் காண்பவனே உண்மை காண்பான்" என்று. அதுகேட்டு சம்சாரி தன்னிடமுள்ள சிறந்தவஸ்துக்களை சந்நியாசியின் திருவோட்டுக்குள்ளே போட்டு விடுகிறான். ஆனல் செய்வதின் பொதுவிதிக்கு அடங்கி நடப்போராகிய தாழ்த்தப்பட்டோர் வீட்டுக்கு வண்ணான் அம்பட்டன் கூட போகக்கூடாதென்று சம்சாரி விதி போடும்போது சந்நியாசி என்பவன் கொஞ்சமும் ஆட்சேபிக்காமல் அதனை முகமலர்ச்சியுடன் ஏற்றுத்தனது திருவடிமண்சார்த்தி ஆசீர்வாதம் செய்கிறான். இப்படிதான் நமது சமூக வாழ்க்கை கெட்டுப்போயிற்று உண்மைக்குப் பரிந்து பேசுவோர்களும் எங்கும் இல்லாமல் போய்விட்டது ஐரோப்பாவில் அப்படி இல்லை. அங்கே உண்மையை மனதிற்குள் அடைத்து வைக்காமல் வழக்கத்தில் காட்டுகிறார்கள் ஜனக்கட்டிலும் ராஜ்ஜியத்திலும் எதனும் குற்றம் வெளிப்பட்டால் அதைப் பொது ஜனங்கள் உண்மை விளக்கால் சோதித்துத் திருத்த வழியுண்டு—இதனுல் கிடைக்கும் சக்தியும் விடுதலையும் எல்லாருக்கும் பயன் பட்டு நம்பிக்கையையும், தைரியத்தையும் உண்டாகுகின்றன. இந்த உண்மை மாய இருளில் மறைந்து கிடக்க வில்லை. திறந்த வெளியில் எல்லோரும் காணுமபடியாக தானும்வளர்ந்து நாடறும் வளரும்படி செய்கிறது. இந்த உண்மைகளை பரிபாலிக்கவே நம் கடவுள் சக்தியெல்லாம் மேல் நாடு போய் விட்டது போலும். கடவுள் சக்திக்கு உண்மையும், சத்தியமும் ஆகாரமே ஒழிய நாம் கொடுக்கும தேங்காயும் பழமும் அன்று.

கடவுள் கருணைநிதான். அக்கருணையாலன்றோ உலகப்புகழும் உத்தம க்ஷத்திரிய குலத்திலே உண்மைக்கு உறைவிடமாய் தர்மத்திற்குத் தாயகமாய், உத்தம புத்திராய் ராமனென்னும் பேரோடு கூடி ஸர்வோத்தம ராஜாதிராஜன் அவதாரம பண்ணி சத்தியம், கருணை, சகோதரத்துவம் முதலிய உத்தம தர்மங்களில் நடந்து காண்பித்தார் நாம் அதைப் பின் பற்றுமல் நெற்றியில் வைக்கும் குறிக்கு பாதம் வைப்பதா அல்லது பாதமில்லாமல் இலதானன்பதும்உண்பது மறைவிலாலுக்கிலா. பூசைக்கு வில்வமா, துளசியா, படைப்பிற்கு பச்சரிசியா, பாசிப்பயரா தோத்திரத்திற்கு முன்னெடுப்பு கேசாதிபாதத்திலிருந்தா? பாதாதிகேசத்திலிருந்தா? என்னும் விஷயங்களிலே அழுந்திக்கிடப்பதை உணர்ந்து தன் வாழ்வை மேனாட்டில் செலுத்திஞ்போலும். பின்னும் நம் பேரில் கருணைகொண்டு சாதாரண குலத்திலே எல்லா குலமும் ஒன்றே எனறு காண்பிக்க ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரம் பண்ணினர். மற்ற அவதாரங்களெல்லாம் பகவானுடைய அம்ச அவதாரங்கள் மாத்திரமேயன்றும் ஸ்ரீ கிருஷ்ணனே சாக்ஷாத் பகவானே என்றும் பெரியவர்கள் சொல்லுகிறார்கள்—மகா ஆச்சரியமான சக்தியாகியாயும், மகா அற்புதமான கிரகஸ்தனும் ஓரே சமயத்திலிருந்து அதி ஆச்சரியகரமான ராஜாகுண வடிவமான அதிகார சக்தியை வகித்த அதி அற்புதமான வைராக்கியமும் குடிகொண்டவராயிருந்தார் பலர் அபேட்சையின்றி அன்பின் பொருட்டு அன்பு. தர்மத்தின் பொருட்டே கர்மம். கர்மத்தின்பொருட்டே கர்மம் என்னும உத்தம சித்தாந்தங்களை கீதையின் மூலமாக உபதேசம் செய்ததானும் நடந்த நமக்குங் காட்டி நமக்கென்றும் பயன் படாதகினல் தன் ராஜ தந்திரத்தின் சக்தியை மேனாடு செலுத்தினர் போலும். "ஐசுவரியமும், பல பராக்கிரமும் உற்சாகமும், காந்தியும ஆகிய இவற்றுடன் சேர்ந்த எவ்விலவ் வஸ்துக்கள் உளவோ அவையெல்லாம் என தேஜஸின் அம்சத்தாலுண்டானவை யென்றறிவாயாக" என்று பகவான் அர்ச்சுனனுக்குச் சொன்னது போல் பல பராக்கிரமமிருக்குமிடத்தில் பகவானின் தேஜஸ் சேர்ந்து விட்டது. பின்னும் அவர் நம்மை மறக்கவில்லை. நம் ஆபாசமான சடங்குகளையும, அவிவேகமான மூடக்கொள்கைகளையும யாகாதி யெகஸ்யங்களான அறியாமையையும கண்டு சம்மாகிய மகா சமூத்திரத்தில் எழுந்த பேரலையின் உச்சியிலே மகா மகிமை பொருந்திய தேஜோமூர்த்தியாகவந்தார். அவர் தான் கௌதமசாக்கியமுனி. தாமே தம் சிஷ்யராய் அவதரித்ததுபோல் முன் அவதரித்த கிருஷ்ண பகவானே தாம் உபதேசித்த தர்மார்த்தங்களை அனுஷ்டிக்கும் வழியைக் காட்ட கர்த்தருய்த் தோன்றினர். அவனை பகவானின் அவதாரமென்கிறோம், க்ஷத்திரியர்களாயினும சூத்திரர்களாயினும் வைசியர்களாயினும உத்தமமான கதியை அடைகின்றனர் என்று கீதையிலே முழங்கிய மகா சப்தமே மீண்டும் எல்லாருடைய பந்தத்தையும், விலங்கையும், கட்டுப்பாட்டையும் தகர்த்து உத்தமகதியை அடைய அனைவருக்கும அதிகாரமுண்டென்று சித்தாந்தப் படுத்தினர். நாம் சொல்லுவது ஜனங்களுக்கு விளக்கவேண்டுமென்ற விருப்பத்தினல் சமஸ்கிருத பாஷையைத் தள்ளி விட்டு ஜன

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

அம்பட்டர் வரலாறு.

(பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு)

அழகு செய்யும் "அம்பட்டர்" என்னும் சாதியினர் அவனியின் கண் எங்கும் உளர். உலகில் எங்குமே சாதி என்பது பரம்பரை யாக வழங்குதலில்லை எனினும், இந்தியாவி லேர் அச்சாதி பரம்பரை என்னும் வழக்கம் உண்மையாக உள்ளது. அதனினும் தென் னிந்தியாவில் தமிழ் நாட்டில் மேலூரன்றி உரம்பெற்றுள்ளது. உரம் பெற்ற சாதியின ரில் பெரும்பாலோர் தத்தமது சாதியின் வழிமுறையை ஒவ்வோர் வழியாக எழுதி வைத்துள்ளார். அங்ஙனம் எழுதுவதில் மக் கள் பிறப்பு முறையினையும் இயற்கைமுறை யினையும் செவ்வனே ஆராய்ந்து அதன் வழி யாகச் சரித்திரமெழுதுவோர் மிகச்சிலர். தமது பரம்பரை அநாதி காலத்தொட்டு நிலை பெற்றுள்ளதென்றும், பரம்பரையின் முதல் வன் சூரியன், சந்திரன் என்றும் புராணம் எழுதிவைத்து விடுவோர் மிகப்பலர். இங்ங னம் நம்மவரின் பெருமையை போனவாறு புனைந்து கூறும் புராணக்கதைகளை உண்மை யென்றுநம்பியே, நம்மிற்பெரும்பாலோர் சா திச் சண்டையில் தலை சிறந்துநிற்கின்றனர். சாதியைப்பற்றிய புராணங்களும் பிறவும் சாதிகளைச் சிறப்பித்துக் கூறுவான் வேண்டி எழுதப்பட்டன சில; சாதிகளுக்குள் பகை வளர்ப்பான்வேண்டி எழுதப்பட்டன பல. இத்தகைய புராணங்கள் ஒன்றுமே "அம்ப ட்டர்" பெயரால் வெளிவராமையான் அப் புராணப்பொய்க் குப்பைகளைக் கிளராமல் "அம்பட்டருக்கு" வழங்கி வரும் பெயர்க ளின் வழியாகவே இவ்வரலாறு ஆராயப் பெறுகின்றது.

அம்பட்டர் பெயர்களாவன:— பரிகாரி, மருத்துவர், பண்டிதர், மயிர்வினைஞர், நாவிதர், மங்கலவர், அம்பட்டர். குருக்கள் பெருமஞ்சிகன், எனாதி, சிரையன், மங்கலி யன, சிவன் என்பனவாம்.

பரிகாரி:—பரிகரி யென்னும் பகுதியின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல். பரிகரித் தல், நீக்குதல், தணித்தல் முதலியன ஒரு பொருளன. உடம்பிற்கு வரும் பல பிணிக ளையும்தணிக்கும்மருத்துவத்தொழில்மேற் கொண்டிருந்தமையால் பரிகாரிஎன்ற பெயர் வந்திருத்தல் வேண்டும். மருத்துவர் என் பதும் இது பற்றி வந்ததே. இன்னும் இவ் வாறு மருத்துவத்தொழில் செய்யும் அம்பட்டர் நாட்டு புறங்களிலும் நகரங்களி லும் வசித்து வருகின்றனர். மருத்துவதொ ழில் புதிதாகக்கைக்கொள்ளப்பட்டதன்று. பழங்காலந்தொட்டு வழி வழி முறையாகக் கொள்ளப்பட்டதாகும். நாட்டு வைத்திய முறைகளைப் பின்பற்றி இரணவைத்தியம் (சால்லிய வைத்தியம்) பிறவைத்தியம் இவற் றில் மிக்க நிபுணையுள்ளவர் இன்னும் இருக் கின்றனர். பல்லடம தாலுகா அப்பநாயக் கன் பட்டி கந்தப்பன் என்பவர் இரணவைத் தியத்தில் சிறந்தவர் என்பதும் சென்னை பண்டிதர் எல். எல். ஆனந்தம் எல்லாவைத் தியத்திலும் சிறந்தவர் என்பதும் யாவரும் அறிவர். பெயர் பெற்ற ஆங்கில வைத்தியர் களால் தீர்க்கமுடியாதென்றுவிட்ட நோய் களை இன்னேர் தீர்த்திருக்கின்றனர். திரு வாளர் ஆனந்தம் அவர்கள் மருத்துவத்தொழி லேயன்றி மற்ற நூலாராய்ச்சியிலும் வல்ல வராயிருப்பது அத்தலத்திற்கே பெருமை யாகும். மருத்துவன் தாமோதரனர் என் னும் பழந்தமிழ்ப்புலவர் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவர் இருந்தனர். தாமோதரனர் இயற்றியதாகத் திருவள்ளுவ மாலையில் "சிந்திநீர்க்கண்டம்" என்னும்பாடலும் ஒன் றுள்ளது. இதனால் அம்பட்டருக்கு மருத் துவர் என்னும் பெயர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்ததென்பது பெறப்படும்.

பண்டிதர்:— பண்டிதர் என்பது மருத் துவர் என்னும் பொருளிலேயே வழங்கப் படினும் வேறுதுறைகளினும் பாண்டித்தியம் மிக்கிருந்தமையால் பண்டிதர் என்னும் பெயரும் பெற்றிருக்கக்கூடும். செந்தமிழ் மொழியில் சிறந்த பண்டிதர் பண்டும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். பழங்காலத்தில் செந்தமிழ்ப்புலவர்—பண்டிதர் அம்பட்டர் குலத்தி லும் இருந்தனர் என்பதற்கு மருத்துவன் தாமோதரனரே சரியான சான்றாகும். சில ஆண்டுகளுக்கு முன்னர் தாராபுரத்தில் வேலாயுத பண்டிதர் என ஒருவர் இருந்த னர். அவர் ஆயிரம் ஆயிரம் தமிழ்ச் செய்யுட் கள் இயற்றியுள்ளார் புராணங்கள் இயற்றும் புலமைபெற்றிருந்தார். ஆகையால் அம்பட் டர்குலத்தில் செந்தமிழ்ப்புலவரும் பிறத்து பேறு பெற்றிருந்தனர்; இருக்கின்றனர்.

மயிர்வினைஞர்:— என்பதின் பொருள் அனைவரும் அறிந்ததே. இது காலை அம்பட் டரின்! பெரும்பாலான தொழிலும் அதுவே.

நாவிதர்:— இதமாக பேசும் நாக்கினையு டையவர் அம்பட்டருடன் கலந்து பழகினவர் க்கு இதன் உண்மை புலப்படும். நாவிதர் என்பது நாகுவர் எனவும் வழங்குகின்றது.

மங்கலவர்:— மங்கலியன் என்பதும் மங் கலவர் என்பதும் ஒரே பொருள். மங்கலியன் எனத் தமிழர் வழங்குகின்றனர். மங்கலவர் "மங்கலவாடு" எனத் தெலுங்கர் வழங்குகின்றனர். மங்கலியன் என்னும் பெயர் பிங்கலநிகண்டிலும் சொல்லப்பெற் றுள்ளது. ஆகையால் மங்கலியன் என்னும் மொழி மிகப்பழங்காலத்திலிருந்தே வழங் கப்பட்டதாகும்.

மங்கலம் என்பது சுபம். சுபகாரியத்திற் குரியவர்மங்கலியர் அங்ஙனம்எச்சுபகாரியம் அம்பட்டரால் செய்யப்பெற்றன என்பதை ஆராய்தற்பாற்று. நமது தமிழ்நாட்டுப் பண் டைத்தமிழ்மக்களுள்ளொன்றுவேளாளகுலத் தினரும்ஒருவகையர். அவ்வேளாளர்களைப்பற் றிப்பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்க ளில் 2000வருஷங்களுக்கு முன்பே மிகச்சிற ப்புய் மொழியப் பெற்றுளன. 2000-வரு ஷங்களுக்கு முன்பே வேளாளர் குறுநில மன்னர் (ஜமீன்) பெருநிலக்கிழவர் (மிராஸ் தார்) ஆகவும் தமிழ் நாட்டில் வதிந்து பெரு மித வள்ளல்களாக வாழ்ந்து வந்தனர். இத் தகைய வேளாள குலத்தினர் திருமணம் நடத்துவதற்கு அம்பட்டரையே அமர்த்தி வைத்தனர். வேளாளர் குலத்தில் நடக்கும் கலியாணச் சடங்குகளும் பிறசுபகாரியங்க ளும் அம்பட்டரே நடத்திவைத்தனர். இன் னும், பெரும்பாலான வேளாள குலத்துக் கலியாணங்களில் அம்பட்டரே புரோகித ராக முன் நின்று நடத்திவைக்கின்றதைக் கண்ணாரக்காணலாம். கலியாணத்தின்றிறந்த சடங்குகளிற் றிறந்தது திருமங்கலியந் தரித் தல். அத்திருமக்கிலியச் சடங்கு தே அம்பட்டரால் நடத்தப்பெற்று வந்த மையால் அவருக்கு மங்கலியர் என்னும் மங் கலப்பெயர் கொடுத்தனர். இம்மங்கலியர் என்னும் மொழி 2000 வருஷத்திற்கு முன் னும் வழங்கப்பெற்றது. ஆகையால் மங்க லவர் என்போர் 2000 ஆண்டுகளுக்கு முன் னரே புரோகிதத் தொழில் செய்து பெயர் பெற்ற குலத்தினராவர்.

உயர்வு பெற்ற தமிழ்க் குலத்தினராகிய வேளாளர்க்குப் புரோகிதத் தொழில் செய் துகொண்டு வந்தமையால் "மங்கலவாடு" என்னும் பெயர் தெலுங்கர் சூட்டினர். தமிழ் நாட்டிற்குத் தெலுங்கர் வடநாட்டிலிருந்து வந்து குடியேறினது சிறிது பழங்காலமே யாகும். எனினும் தெலுங்கர் நாடு நாயடு, அல்லது "நாயடு" "நாயக்கர்" குலத்தினர் தமிழ் நாட்டில் குடியேறி அரசாக ஆண்ட காலம் 400 வருஷங்களாகும். 400 வருஷங் களுக்கு முன்பும் அம்பட்டர் புரோகிதத் தொழில் செய்து சிறப்பாகத்தமிழ் மக்களு டன் வாழ்ந்து வந்தமையால் அம்பட்டரை "மங்கலவாள்ளு" என உவந்து மொழிந் தனர்.

வேளாள குலத்தினரின் திருமணச்சடங் குகளில் சொல்லப்பெறும் மந்திரங்கள் தமிழ் மொழியில செய்யப்பெற்றிருந்தன தூய தமிழ் மக்கள் திருமணத்தில் சிறக்க தமிழ் புரோகிதர் மங்கலவர் செந்தமிழிலே மந்தி ரங்கள் ஓதி வந்த காலமும் ஒன்றிருந்தது. அத்திருமணங்களில் ஓதும் மந்திரங்களைச் செய்யுள் வடிவமாகக் கம்பநாடரும் செய் திருக்கின்றனர். இங்ஙனம் பல புலவரும் செய்திருப்பர். கம்பநாடர் செய்த பாடல் "வாழ்த்து பாடல்" என ஓர் நூல் திருச் செங்கோடு திருவாளர் முத்துசாமிக்கோனர் அவர்களால் அச்சிடப் பெற்றுள்ளது கம்ப நாடர் காலமும் 1000 வருஷங்களுக்கு முன் னதாகும். ஆகையால் 1000 வருஷங்களுக்கு முன்னரே செவ்விய தமிழ் மொழியில் மந்தி ரங்களைச் சொல்லிய புரோகிதர் அம்பட்டர் எனின் அவர் பெருமையும் புகழும் தமிழ் நாடுமுழுவதும் போற்றியிருத்தல் வேண்டும் பரவியிருத்தல் வேண்டும். வடக்கே பூரிஜகந் நாதத்தில் கோயில் அர்ச்சகர்களாகப்பழங் காலந்தொட்டு அம்பட்டர் இருந்துவந்தனர் இப்பொழுது கோயில் நிர்வாகப்பொறுப்பு முழுவதும் அம்பட்டர் ஆளுகையிலேயே இருக்கின்றது.

அம்பட்டர்:— குருக்கள் அம்பட்டர் என் பன ஒரே பொருள். அம்பட்டர் எனும் பெயர் புரோகிதம் செய்ததினால் வந்ததா கும். சில நூற்றாண்டுகளாகப் புரோகிதம் செய்பவர் பார்ப்பனர்களாகஇருக்கின்றனர். பார்ப்பனர்களுக்குப் பட்டர் குருக்கள் என் னும் பெயர்கள் இன்றும் வழங்குகின்றன. பார்ப்பனர்களைப்போல் அம்பட்டரும் புரோ கிதம் செய்து வந்தமையால் அவர்களுக்கும்

[இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.]

தஞ்சை ஜில்லாவில் ஸ்ரீமான்
ஈ. வெ. இராமசாமி நாயக்கரின்
சுற்றுப்பிரயாணம்.

நாகப்பட்டணம்.

ஊர்வலம்

ஸ்ரீமான் நாயக்கர் 4 தேதி இரவு ஈரோடு விட்டுப்புறப்பட்டு 5 தேதி காலை 10-45 வண்டிக்கு நாகை வந்து சேர்ந்தார். நாகை ரயில்வே பிளாட்பாரத்தில் சுமார் இரண்டு மூவாயிரம் ஜனங்கள் பாண்டு வாத்தியம் மேளவாயத்தியம் பஜனை கோஷ்டி தேசியக்கொடி முதலிய துகளுடன் எங்கும் கதர் ஆடை மயமாக ரயில்வருதற்கு 10 நிமிஷம் முதற் கொண்டே ஜே! கோஷத்துடன் எதிர்பார்த்திருந்த மகாஜனங்கள் நாயக்கர் வரும் வண்டியைப் பார்த்த உடன் பெருத்த ஆரவாரத்துடன் வானம் இடிபடும்படி சகலவாத்தியத்துடன் நாயக்கருக்கு ஜே!ம்கர்மாவுக்குஜே! என்று சப்தமிட்டு நாயக்கர் வண்டிக்கருகில் ஓடோ திளாகக் கூடிவிட்டார்கள். பிறகு வெகு கஷ்டத்துடன் ஜனங்களை ஒதுக்கி நாகை பிரபல்ஸ்தர்களும் தலைவர்களுமான ஸ்ரீமான்கள் வி. பி. காயாரோஹணம் பிள்ளையவர்களும், தாலூகாபோர்டு பிரசிடெண்டு எஸ். ராஜகோபால் நாயுடுகாரும் மற்றும் முனிசிபல் கவுன்சிலர்கள் தாலூகா போர்டு மெம்பர்கள், ஆதிதிராவிட சகோதரதலைவர்கள் தேச பக்த சமாஜத்தார், சுயமரியாதைச்சங்கத்தார். பார்ப்பனரல்லாதவாலிபச் சங்கத்தார் திராவிடச்சங்கத்தார், செங்குதுல சங்கத்தார், தொழிலாளர் சங்கத்தார் தேசிய கிருஸ்துவ சங்கத்தார் சேனைத்தலைவர் சமூகச்சங்கத்தார் முதலிய ஆநேக்தொகுதிக்காரர்கள் தனித்தனியாக மாலையிட்டு ரயில்வே வெயிட்டிங் ரூமுக்கு வாத்தியத்துடன் அழைத்துச்செல்லப்பட்டார். வெயிட்டிங் ரூமில் பல அதிகாரிகளும் ரயில்வே அதிகாரிகளும் ஊர் பிரமுகர்களும் தனித்தனியே அறிமுகம் செய்யப்பட்டனர். அதே வண்டியில் சென்னை ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களையும் தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தையும் எதிர்பார்த்திருந்தார்கள் ஆதலால் அவர் அதில் வராததை கேட்டு ஆனேகர் ஏமாற்றமடைந்தாலும் ஊர்வலத்திற்கு ஆரம்பமாகி எல்லோரும் ரயில்வே கட்டடத்தை விட்டு வெளியேறினதும் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் தஞ்சையிலிருந்து கேரே மோட்டாரில் ரோட்டு வழியாகவந்து சேர்ந்ததும் ஏமாற்றமடைந்திருந்த அப்பெரிய கூட்டத்திற்கு எற்பட்ட சந்தோஷத்திற்கும் ஆரவாரத்திற்கும் அளவே இல்லை, உடனே ஸ்ரீமான் நாயக்கரும் பன்னீர்செல்வமும் தாலூகா போர்டு பிரசிடெண்டு ராஜகோபால் நாயுடுகாரும் ஒரே மோட்டார் வண்டியில் ஸ்ரீமான் காயரோகணம் பிள்ளை அவர்கள் இளைய சகோதரர் மோட்டார் நடத்த வெகு அழகாய் முன்னால் அலங்கரிக்கப்பட்ட ஒருஉயர்ந்தசப்பரத்தில் ஸ்ரீமான் வி. பி. பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் படத்தை நிறுத்தி ஒரு பெரிய 4 சக்கரசகடவண்டியின் மீது வைத்துக்கட்டி பலபேர் இழுக்கவும் முதலில் பாண்டு அதற்கு பிறகு நாகசுவரம் அதற்கு பிறகு பஜனை கோஷ்டி இருபுறகதிலும் இரண்டு குதிரையின் பேரில் தொண்டர் தலைவர்களும் இருமருங்கிலும் கதராடை உடைபுடன் சுமார் 100, 150, தொண்டர்களும் சுமார் 5000 ஜனங்கள்சூழ கடை வீதி வழியே மெதுவாக சென்றது கடை வீதி நெடுக ஆங்காங்கு ஊர்வலத்தை நிறுத்தி மாலைபோடுகிறவர்களும் வெற்றிலை பாக்கு சக்கனம் கலகண்டு பழம் முதலியது கள் வினியோகிப்பவர்களுமாய் இருக்கவும் தொழிலாளர் சங்கக்கட்டடத்திற்கு சமீபம் ஊர்வலம் வந்தபோது அங்கு ஸ்ரீமான் ஜீ. வீ நாயுடு அவர்களால் புகைப்படம் எடுக்கவும் வீதிகள் நெடுக தோரணங்களும் வளைவுகளும் அதுகளில் முக்கிய விஷயங்கள் எழுதப்பட்ட தட்டிகள் கட்டியும் அவற்றைக கண்டவிடங்களில் எல்லாம் ஜே கோஷமுமாய் சுமார் ஒரு மணிக்கு ஊர்வலம் பார்ப்பனரல்லாத வாலிப சங்கக்கட்டடத்திற்கு வந்து சேர்ந்தது. ஊர்வலத்திற்கு எற்பாடு செய்திருந்த யானை காலில் ஏதோகொஞ்சம் வீண இருந்ததால் கூடவே வரமுடியாமல் தளுங்கி வரவேண்டியதாய்விட்டது. பொதுவாக நாகை ஊர்வலமானது மதுரை ஊர்வலத்தை ஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தது ஊர்வலம் முடிந்தவுடன் வெளியூரிலிருந்து வந்திருந்த பலகனவான்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது சமீபத்தில் ஸ்ரீமான் ராஜகோபால் நாயுடுகாருக்கவிலாசங்களாவில் ஒரு பெரிய விருந்து நடந்தது.

ஸ்ரீமான் பன்னீர்செல்வத்திற்கு உபசாரம்

பிறகு சுமார் 3-30 மணிக்கு ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது. அச்சமயமும் வெளியூர்களிலிருந்து பல கனவான்கள் வந்திருந்தார்கள். சிற்றுண்டி முடிந்தவுடன் புகைப்படம் எடுக்கப்பட்டு அந்தபக்கதில் கதர் துணிகளாலேயே அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு அழகிய கொட்டகையில் சர்க்கார் அதிகாரிகள் உள்பட சுமார் 2000 ஜனங்கள் சூழ்ந்திருக்க நாயக்கர் தலைமையில் ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்களுக்கு ஒருஉபசாரபத்திரம் கதரில் அச்சடித்து வரவேற்பு சங்கத்தலைவர் ஸ்ரீமான் காயாரோகணம் பிள்ளை அவர்களால் வாசித்து ஒரு அழகிய வெள்ளிகுழாயில் வைத்து கொடுக்கப்பட்டது. மற்றும் ஸ்ரீமான்கள் நாயக்கருக்கும் பன்னீர்செல்வம்அவர்களுக்கும் பல பல சங்கத்தார்களால் பல வரவேற்பு பத்திரங்களும் வாசித்து கொடுக்கப்பட்டன இதுமுடிந்தது.

ஸ்ரீமான் பன்னீர்செல்வத்தின் பதில்.

ஸ்ரீமான் பன்னீர்செல்வம் அவர்கள் உபசாரபத்திரத்திற்கு பதிலளிக்கும் போது தான் ஜில்லா போர்டு தலைவர் என்கிற முறையில் ஆர்ப்பனரல்லாதசமுகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்று நினைத்து அளவுசெய்யவில்லையெனறும் ஆனாலும் இனி கூடியவரை செய்வதாயும் ஸ்ரீமான் நாயக்கர் போன்ற தலைவர்கள் அவ்வப்போது தனது தப்பிதங்களை எடுத்துக்காட்டி கண்டித்து திருத்த வேண்டுமென்றும், தாம எப்போதும் அந்தப்படி நடக்கதயாராயிருப்பதாகவும் அதிகாரிகள் விஷயத்தில் காம் செய்யவேண்டியது இன்னமும் அதிகமாயிருக்கிறதென்றும் இவ்வருஷஜில்லாபோர்டு வரவு செலவு திட்டத்தில் மற்ற பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார பிள்ளைகளுக்கு எப்படி சாப்பாடு துணி, கல்வி முதலியது இலவசமாய் கொடுக்கப்படுகிறதோ அதுபோலவே சுமார் 25 ஆதிதிராவிட பிள்ளைகளுக்கும் சாப்பாடு துணி கல்வி முதலியது இலவசமாய்க கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும் அவைகள் அதிகமாய் நிறைவேறுமென்றும் இவைகள் எல்லாம் செய்ய தலைவர் ஸ்ரீமான் நாயகர் அவர்கள் உபதேசமும் பங்களமுமேதங்களுக்குதவியம்கொடுத்தென்றும் இன்னமும் இதுபோலவே செய்யக்காத்திருப்பதாகவும் சொன்னார். ஸ்ரீமான் நாயகர் பேச எழுந்ததும்.

பொதுக்கூட்டம்.

வெளியில் இருந்த ஜனங்கள் கூட்டம் கூட்டமாக உள்ளே பிரவேசிக்கவும் நெருக்கமும் கலாட்டாவும் அதிகமானதாலும் அநேகர் வெளியில், வெளியில் என்று கூச்சலிட்டதும் நாயக்கர் சில வார்த்தைகள் மட்டும் முடிவுரையாகச்சொல்லி கூட்டத்தை வெளியில் எற்பாடு செய்யும்படி வேண்டிக்கொண்டார். அந்தப்படியே 5 நிமிஷத்திற்குள் போலீஸ் ஸ்டேஷனுக்கு எதிரில் கூட்டம் என்று சொன்னதும் அந்த சுமார் 5 00 ஜனங்களுக்கு மேலாகவே கூடிவிட்டார்கள். பார்ப்பனர் சகோதரர்களும் உத்தியோகஸ்தர்களாகவும் வக்கீல்களாகவும் மற்றும் பலராகவும் நிறைந்திருந்தார்கள்.

கூட்டத்தில் ஆதிதிராவிடர்.

ஆதிதிராவிட சகோதரர்களும் நிறைய வந்திருந்தார்கள். அவர்கள் ஒரு புறமாய் ஒதுங்கி இருந்தவர்களை ஸ்ரீமான் நாயக்கர் கூட்டத்தில் வந்து கலந்து உட்காரும்படி கேட்டுக்கொண்டதும் ஜனங்களும் தாராளமாய் இடம் கொடுக்க அவர்களும் கலந்து உட்கார்ந்திருந்தார்கள். ஸ்ரீமான பன்னீர்செல்வம் அவர்களை அதிகாரசனம் வகிக்கும்படி ஸ்ரீமான் காயரோகணம் பிள்ளை அவர்கள் பிரேரேபிக்க மற்றொரு கனவான் ஆதரிக்க பெருத்த கரகோஷத்தினிடையே அவர்கள் தலைமைவகித்ததும் அங்கும் தேசபக்த சமாஜத்தார் முதலியவர்களால் இரண்டொரு உபசாரப்பத்திரங்கள்வாசிக்கப்பட்டு அதிகாசனர் முகவுரையாக ஸ்ரீமான் நாயக்கரைப்புகழ்ந்து சிலவார்த்தைகள் சொல்லி பேசும்படி கேட்டுக்கொண்டார். நாயக்கர்

முழுதும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தது. மாலை 6 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய கூட்டம் 7 மணிக்கு ஆரம்பமாகி 10 மணிக்கு முடிவடைந்தது. பிறகு தொண்டர்களுக்கும் பார்ப்பனரல்லாதார் சங்கத்தாருக்கும் பிரதிநிதிகளுக்கும் தனித்தனி இடங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆயினும் பிரதிநிதிகளுக்கும் தொண்டர்களுக்கும் ஒரே இடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பிரதிநிதிகளுக்கு மட்டும் தனியாக ஒரு மேஜை போட

யார் யோக்கியர்கள்?

பார்ப்பனரின் மூட்டுக்கட்டை

(லி. ரா.)

காங்கிரஸ் கட்டளையைத் தலைமேற் தொங்கவேண்டும் என்று தேர்தலுக்கு முன்பு பொய்யும் புரட்டும் அளந்து அர்ப்பாட்டம் செய்த பார்ப்பனர் (சுயராஜ்யக் கட்சியார்) இப்போது ஏன் அக்கட்டளையை காற்றில் பறக்கவிட்டு விட்டார்கள் என்பதைப் பொது ஜனங்கள் தெரியவேண்டும். இவர்கள் சட்டசபைகளில் மூட்டுக்கட்டை போட்டு சர்க்காரைத் திணறச் செய்வோம் என்பதும், பதவி ஏற்றுக்கொள்ளுவதும் வெறும் வெளி வேஷங்களே யொழிய உண்மையல்ல வென்பது பல தடவைகளில் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது இப்போது தெளிவாகவிளங்கி விட்டது. நமது மாகாணத்தில் மந்திரி நியமனகாலத்தில் இந்தப் பார்ப்பனர்களுக்கு வாயில் நீர் ஊறிக்கொண்டிருந்தும் அவ்வளவு சுலபத்தில் வலை பிடிக்கக்கூடாதென்று கவர்னரைக் கேட்டுக் கொண்டதும் எல்லாரும் உணர்ந்த விஷயமாகும். எந்த மாகாணத்திலும் தங்களை காசு செல்ல வழியில்லை யென நினைத்தப் பழைய படி வெறும் மூட்டுக்கட்டைத்தீர்மானமென்ற காங்கரஸில் நிறைவேற்றி வைத்தார்களே யொழிய உண்மையான நோக்கங்கொண்டல்ல. உதாரணமாக மந்திரி சம்பளத்தையும் உயர்த்தி தள்ள வேண்டும், வரவு செலவை நிராகரிக்க வேண்டும் என்ற தங்கள் ஜீவகாரமான தீர்மானத்தை சென்னை சட்டசபையில் ஏன் வற்புறுத்தக்கூடாது? இதற்கு சமாதானமாக ஸ்ரீரங்கம் விவேகானந்தாசிரமம் ஆண்டு நிறைவு விழாவின் போது கோவை ஸ்ரீமான் கி. வி. வெங்கட்டராமணை ஐயங்காராவர்கள் அடியில் வருமாறு கூறியதாக 9-ம் "மித்திரன்" னில் வெளியாயிருக்கிறது அதாவது

"கவர்னர் தமது விசேஷ அதிகாரத்தைக் கொண்டு சட்டசபையால் நிராகரிக்கப்பட்டதையும் நிலைத்திருக்க அனுமதிக்க முடியுமாதலால் காங்கிரஸ் காரர்கள் வரவு செலவு திட்டங்களை நிராகரிப்பது உபயோகமில்லை யென்றும், காங்கிரஸ் காரர்கள் மந்திரிகளுடன் ஒரு ராஜி செய்து கொண்டிருக்கிறார்களென்றும், இதன்படி தேசத்தின நன்மைக்கான பொதுவேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுமென்றும், மந்திரிகள் தாங்களாகவே தங்கள் சம்பளத்தைக் குறைக்கும்படி மீகட்டக்கூடுமென்றும்" சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீமான் ஐயங்கார் சொல்லியிருக்கிறபடி அவர்கள்செய்து கொண்டிருக்கிற ராஜியின் அருத்தமென்ன? "எங்கள் பிள்ளை குட்டிகளுக்கும் மாமன் மைத்துனர்களுக்கும் இனத்தார்களுக்கும் நீங்கள் (மந்திரிகள்) உத்தியோகங்களைமாத்திரம் காங்கள் சொல்லுகிறபடி கொடுத்துவிடுங்கள்; பினபு உங்கள்விஷயத்தை கனவிலுங்கூட நாங்கள் நினைக்கிறது இல்லை என்பதும், மந்திரிமார்களும் நம்முடைய அப்பன் வீட்டு முதல் என்ன போகிறது என்று அவர்கள் "போடு தோப்புக்கரணம் என்றால் எண்ணிக்கொள்" என்று சொல்லி விட்டுத் தங்களுக்கு எப்படியும் மாதம் 500 ரூபாயும் பிரயாணப்படியும் வக்கீற் தொழிலையும் விடாமல் கவர்னரின் சாரசகிகமாய் சுற்றுப்பிரயாணஞ் செய்து வருவதற்கு வசதியும் கொடுத்தால் நாங்கள் சமாதானமாய் சர்க்காரோடு ஒத்துழைக்கிறோம் என்பதை ஜஸ்டிஸ் கட்சியார் முன்னரே உணர்ந்தும் எதிர்காலஞ் சமயமும் நன்மையுண்டாகாதா என்று பதறுகையாய் சர்க்காரோடு ஒத்துழைக்கிறார்கள். இந்த ரஹஸ்யம் பார்ப்பனர்களுக்கு இப்போழுதுதான் உதயமாகியிருக்கிறது போலும். இவ்விருகட்சியாருள் யார் யோக்கியர்கள் என்பதை வாசகர்கள்தான் உணர வேண்டும்

பிரபல வருடத்திய சுயமரியாதைக் கான்பரன்ஸ்.

இது பிரபவிற்கு சித்திரைமீ முதல்பங்குனிமீ வரை 2 தமிழ்மாதங்களுக்கும்விஞ்சியிடப்படுவது. இதில்விஷே தேதிகள் கதாநாத்திரங்கள், நிறங்கள், பண்டிகைகள், விரதகாட்கள்முதலியவைகளுடன்கூடியது 12 மாதத்திற்கு பன்னிரண்டு தான்தலைமை சுயமரியாதைச் சங்கங்களின் தலைவர் ஸ்ரீமான் காயக்கர் அவர்களின் பெரிய திருவுருவம் உள்ளதும் பல அநுகூலமான சுயமரியாதைச் சொற்கள் அமைக்கப் பெற்றதும் பல வர்ணங்களால் அச்சியற்றியதுமான கல்ல பளபளப்பான அட்டையின் கீழ் சேர்க்கப் பெற்றிருக்கும் நான்கு அணா பெறுமான இக்காலண்டர் ஒன்றுக்கு 0-2-0 விலையாகக்மிட்டி தீர்மானித்து விட்டதால் இவ்வொரு தமிழ் மகனும் 10 காலண்டர்களாவது வாங்கித் தாமும் இருக்கும் கிராமத்திலோ, தெருவிலோ நில்லாமல் வருட முழுதும் ஒவ்வொரு நிமிடமும் சுயமரியாதையை உணர்த்திக் கொண்டேயிருக்குமென நம்புகிறோம்.

ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள சுயமரியாதைச் சங்கங்களிலிருந்தும், சுயமரியாதை வீரர்களிடமிருந்தும் வருகிற ஆர்டர்களைக் கணக்கிட்ட பறகே எத்தனை காப்பிகள் ஆச்சடிப்பது? என்ற முடிவுக்குவரவேண்டியிருப்பதால்தயவு செய்துதங்கட்குவேண்டிய காலண்டர்கள் எத்தனை என்பதை உடனே தெரிவியுங்கள். 25-3-27க்குள் கிடைக்கும் ஆர்டர்களுக்கு மட்டுமே காலண்டர் கிடைக்கும். வெளிநாட்டு நண்பர்களுக்கு அதிர்ஷ்டம் போல. விலாசம்

சுயமரியாதைக் காலண்டர் கமிட்டி.
54, தஞ்சாவூர் ரோட்டு, திருச்சிராப்பள்ளி.

திருப்பூர் தேவாங்கபுரம் முனிசிபல் எலிமெண்டரி பாடசாலைப் புதுக்கட்டடத்திறப்பு:—கோவை ஜில்லா கல்வி இலாகா இன்ஸ்பெக்டர் சி, ரான்ஸ்போர்டு துரையவர்களால் மார்ச்சுமீ 13வ் ஷி கட்டடத் திறப்புவிழா கடைபெறும் என்று திருப்பூர் சேர்மென், உபசேர்மென் ஆகிய இருவரும் அறிவித்திருக்கிறார்கள்.

சேலம்

திராவிட கலஉரிமைச் சங்கம்

திராவிட கல உரிமைச்சங்கம் எனற பெயருடன் இவ்வூர் பிராமணரல்லாதார் சபை யொன்று எற்படுத்தி சுமார்30 அங்கத்தினர்கள் வரையில் சேர்த்திருக்கிறார்கள்; இச்சபையில் திராவிடர்களாகிய தமிழர்கள் யாவரும் அங்கத்தினர்களாகச் சேரலாம். பழந்தமிழ்ப் படிகளாகிய திராவிடர்கள் ஆரிய ஜாரியரின் மாயவலையினின்றும் விடுபட்டுத் தமதரியபாரம்பரியத்தைப் காத்துக்கொள்வதும், பொருளாதார, சமூக, மத அரசியல் கல்விமுதலிய விஷயங்களில் முன்னேற்ற மடைய முயற்சிப்பதும், சமூக சமத்துவத்திற்காகப்பாடுபடுவதும், நீதியும், சுயமரியாதையும் கொண்ட சகல முறைகளிலும் அனுசரித்து சுதந்திரம் அடையமுயற்சிப்பதும் இச்சபையின் நோக்கங்களாகும், அங்கத்தினர்களின் வருடசந்தா அணா 4 ஆன் கு. 12-3-1927 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சேகாழி குமர சேகாவில் மேலவீதி "சுமரன்பிலய"த்தில் அங்கத்தினர்களின் பொதுக் கூட்டம் கூடி நிலைசபை அமைக்கப்படும்.

அது சமயமை, தஞ்சை ஜில்லா 6-வதுபிரமணல்லாதார் மகாநாடு, மகாத்மா விஜயம் சமூக சீர்திருத்தம் முதலிய விஷயங்கள் ஆலோசிக்கப்படும்

காழிக் கல்விக் கழகம்

இக்கழகத்தினர் வித்தவான் பரீட்சைக்கும் பண்டித பரீட்சைகளுக்கும் குறித்தபாடங்களையும் பூர்த்தி செய்து தாளது பங்களிமாதம் 1 தேதி முதல் வேதாரண்ய சாஸ்திரிகளுஞ் செய்யக்காத்து இருக்கின்றனர். பங்குனி மாதம் 25 தேதி தொடங்கும் பிரமபுரீசுவர் பிரமோற்சவத்தில் 26 தேதி திருமுலைப்பால் வைபவம் கொண்டாடப்படும். இவ்விழா நாட்களில் தக்க பெரியார்கள் பல அரிய விஷயங்களைப்பற்றி உபந்யாசம் செய்வார்கள். பிரதினமும் மாலை 5 மணிமுதல் கமலியாண்டார் கமபிகள் பாடிய நிருஞான சமபந்தர் திருவுலாவை ஆதிபுரி திருவாரூருலா திருப்பல்லாண்டுகளுஞ்சிலாங்க விவரித்தும் திருமலையப்பர் திருமடலை விளக்கியும் சொற்பொழிவுகள் நிகழும். இந்நிகழ்ச்சிக்குரிய இடங்கள் அவ்வக்காலையில் தெரிவிக்கப்படும் என்று திரு சாமிநாதன் அறிவிக்கிறார்.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

ஸ்ரீமான் நாயக்கரவர்கள் 12 தேதி சனிக்கிழமை இரவு வண்டியில் கோவைக்குச் சென்றார்கள். அங்கிருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை மெயிலில் சென்னைக்குச்சென்றுவிட்டு புதன்கிழமை வாக்கில் ஈரோடுசேர்வார்கள். அடுத்தவாரம் 19 தேதி திருச்சிக்கும் 20 தேதி திருவாரூர்க்கும் 21தேதி தஞ்சை பாடிக்கும் சென்று விட்டு 22-ல் வாக்கில் ஈரோடு சேர்வார். 28 தேதி அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரத்திற்குப் போவார். ஏப்பரல் மாதம் முழுதும் எங்கும் சுற்றுப்பிரயாணம் செய்யமாட்டார்கள்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்தனே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
இனத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறுண்டுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

அக்ஷய-வரு மாசி-மீ 30-உ

பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார் யுத்தம் தொடங்கப்பட்டுவிட்டது

கொஞ்ச காலமாக நம் நாட்டுப் பார்ப்பனரல்லாதார் மக்கள் தங்களது சுயமரியாதை உணர்ச்சிபெற்று பார்ப்பனீய அடிமைத்தன்மையில் இருந்து விடுபடவேண்டும் என்கிற உணர்ச்சி பெறுகிற காரணத்தால் இப்பார்ப்பனர்கள் இவ்வுணர்ச்சியை அடக்கி ஒழிக்க பலவழிகளிலும் முயற்சித்துவருவது பொது விஷயங்களில் கண்ணோட்டம் செலுத்திவரும் யாவரும் அறிந்ததே. அதாவது 10 வருஷங்களுக்கு முன்னால் டாக்டர் நாயர்பெருமானும் நியாகாரா பெருமானும் அரசியல் துறையிலும் காங்கரஸ் இயக்கத்திலும் எவ்வளவு தூரம் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும் அக்கால அரசியல் காங்கரஸ் கான்பரன்சுகளில் தலைமை வகித்தல் அமிதவாதமான சொற்பொழிவு நிகழ்த்துதல் கமிட்டியில் கூட்டி சொல்லுதல் தேசிய அபிப்பிராயம் சொல்லுதல் இரகசிய போலீசாரின் கண்காணிப்புக்கு ஆளாகுதல் முதலிய காரியங்களில் தற்காலம் மிக பெரிய தேசபக்தர் தேசத்தொண்டர் தேசபிதா தேசியத்தலைவர் என்று சொல்லப்படுவார்கள் எவர்க்கும் இளைத்தவர்கள் அல்லாதவாயிருக்க வந்தது யாவரும் அறிந்ததே.

இப்பொழுதானது பார்ப்பனரல்லாதார் "தேசபக்தர்" ஆவதென்றால் வெகு சுலபமானகாரியம். எனெனில் பார்ப்பனர்களுக்கு விரோதம் என்று படும்படியாய் பார்ப்பனரல்லாதார் கட்சியென்று ஒன்றிருப்பதால் அக்கட்சியை வைவதற்கென்றே ஒரு விரோதமாய் பிரசாரம் செய்வதற்கென்றே ஒரு பூணூர்க்குட்டியோ நாய்க்குட்டியோ வைத்தாலும்மதி பார்ப்பனர்கள் அதற்கும் ஜே! போட்டு மாலை இட்டு வண்டியில் வைத்து இழுத்து பத்திரிகைகளின் மூலம் நான்-நான் என்றெடுப்பட்டமும்கூட்டிவயிற்றுப்பிழைப்புக்கும் கட ஆதாவு தேடிக்கொடுப்பதும். நாக்கூலி மாதக்கூலி கொடுப்பதுமான சவுகரியம் இருப்பதால் யார் வேண்டுமானாலும் தேசபக்தரும் தலைவரும் ஆகிவிடலாம். இப்படிப்போல் இல்லாமல் பார்ப்பனரல்லாதார்களோ முற்போகவொட்டாமல் தடுத்து சூழ்ச்சி செய்து அடக்கி ஆளும் வஞ்சக காலத்தில் தேசத்தலைவராகவும் தேசபக்தர்களாகவும் ஒரு பார்ப்பனரல்லாதார்களிளஞ்சி இருந்தனரென்றால் அவர்கள் எவ்வளவு தீவிர தேசபக்தியும் தைரியமும் உடையவர்களாயிருந்திருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களை இப்பார்ப்பனர்களின் உபத்திரவத்தையும் சூழ்ச்சியையும் கொடுமையையும் வஞ்சகத்தையும் பொறுக்கமாட்டாமல் தேசத்தை விடசுயமரியாதையே பெரிதென்றெண்ணி பார்ப்பனர் ஆதிக்கம் பார்ப்பனர் கூட்டுறவு முதலிய பார்ப்பன சம்பந்தமுள்ள அரசியலை உதறித்தள்ளிவிட்டுவந்து தனியாக பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்கும்முன்னேற்றத்திற்கும்சமத்துவத்திற்கும் ஆக ஒரு இயக்கத்தை ஆரம்பித்ததும் அதை ஒழிக்க பார்ப்பனர்கள் செய்த பிரயத்தனங்களும் அதற்காக பார்ப்பனரல்லாதாரை கை ஆயுதமாக உபயோகித்துக் கொண்டதும் அனுபவபூர்வமையும் பிரத்தியக்ஷபூர்வமாயும் யாரும அறிந்ததே. அதுபோலவே இப்போதும் இப்பார்ப்பனர் சூழ்ச்சியில் சிக்கி முன் அனுபவப்பட்டவர்களைக் கண்டும் புத்திவராமல் தாங்கள் அவர்களைவிட அனுபவசாலிகள் புத்திசாலிகள் கெட்டிக்காரர்கள் என்பதாகவோ அலட்சிய புத்தியாலோ பார்ப்பனமாய்கையில் எமாந்தோ சிலர் சிக்கி விழுந்து பார்ப்பனரல்லாதார் இயக்சத்தையும் கெடுத்த மக்களையும் சுயநலக்கார நயவஞ்சகர்கள் வசம் காட்டிக்கொடுத்து புதிதாய் பார்ப்பன அனுபவம் பெற்று அவர்களின் யோக்கியத்தை தெரிந்து டாக்டர் நாயர்பெருமான் நியாகாரயர் போன்று விலகி முனைவீலும் அதிகமாய் அவ்வியக்கத்தை பலவச்செய்து வருகிறார்கள் என்பதும்யாவரும் அறிந்ததே. ஆனால்நமது பார்ப்பனர்களுக்கு தாங்கள் முன் சொல்லப்பட்டவர் இயக்கங்களை ஒழிக்கபிரயத்தனப்பட்டகாலத்தில் சவுகரிய மேற்பட்டது போல் இப்போது சவுகரிய மேற்படவில்லை எனெனில் பாமர ஜனங்கள் கண்விழித்துக் கொள்ளத்தக்க நிலைமைக்கு வந்துவிட்டார்கள். தனிப் பார்ப்பனரலாதார் இயக்கத்தை நிட்டவும் அழிக்கவும் முன் ஆள்கள்கிடைத்த மாதிரி பார்ப்பனரல்லாதாரில் மரியாதையும் யோக்கியதையும் பாமர ஜனங்கள் நம்பத்தகுந்த நிலைமையும் உடைய எமாந்தசோணகிரிகளாக யாரும்கிடைக்கவில்லை ஒவ்வொருவராக கழுவியும் விட்டார்கள் கழுவிக்கொண்டேயும்வருகிறார்கள் ஆதலால் வெறும் வயிற்றுச் சோற்று ஆசாமியும் தினக்கூலி மணிக்கூலி ஆசாமிகளும் தவிர வேறியாருக்கிடைப்பதுமில்லை. இதனல் பார்ப்பனர்கள் பாடு இக்கக்காரியத்திற்கு ஆள் கிடையாதுவெது திண்டாட்டமாய்ப் போய்விட்டதால் இப்போது அவர்கள் புதியதந்திரம் ஒன்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அதாவது வெள்ளைக்காரர்கள் தடவை எதிர்பார்ப்பது சட்டசபை லோக்கல் போர்டு மியூனிசிபாலிடிகளில் இனத்தவர்களை இப்போது ஆதிக்கம் பெற்றிருப்பதால் அதைக்கொண்டு சட்டத்தின் பேரால் இவ்வியக்கத்தை ஒழிக்க முயற்சித்து வருகிறார்கள். எப்படியெனில் பம்பாய் மாகாணபார்ப்பனரல்லாதார் மந்திரி ஸ்ரீமான் யாதவர் இங்கு வந்தகாலத்தில் அவர் மீது சர்க்கார் சட்டமெம்பர் ஸ்ரீமான் சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு அவரை இம்மகாணத்தை விட்டு ஏன் வெளியேற்றியிருக்கக்கூடாது? என்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள்சொன்னதும்அதற்குபிறகு ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி காயக்கர் பேரிலும் ஆரியா அவர்கள் பேரிலும் சட்டமெம்பரும் ஆட்வொகேட் ஜனரலும் கவர்ன்மெண்டும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் அவர்கள் சர்க்காரைக் கெஞ்சினதும் சென்ற வாரம் திருமண்ணுமலையில் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் ஸ்ரீமான் காயக்கர் முதலியவர்கள் பேரில் சர்க்கார் 153-A பிரிவுப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சர்க்கார் எடுத்துக் கொள்ளாவிட்டால சுயராஜ்யக் கட்சியாராவது எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னதும் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தஞ்சைக்கு கதர் பிரசாரத்தின்பேரால்இவ்வாரம்போயிருந்தகாலத்தில் "தமிழ்நாடு," பேரில்நடவடிக்கைஎடுத்துக்கொள்ளவேண்டும் என்று பொதுக் கூட்டத்தில்பேசினதும்சர்க்கார் அதிகாரத்தில்உள்ள பார்ப்பன பெரிய அதிகாரிகள் சிலர் இவர்கள் வேண்டுகோளுக்கு அனுகூலமாய் ஆதாரங்கள் தேடிக்கொண்டும் எத்தடுத்துக் கொண்டும் இருப்பதும் ஆகியவைகளே இதற்கு போதுமான ஆதாரங்கள். ஒத்துழையாமைக்காரரும் அரசாங்கத்திற்கு முட்டுக்கட்டை போடுபவர்களுமான பார்ப்பனர்களை இம்மாதிரி ஆசை கொள்ளுவார்களையானால் மற்ற பார்ப்பனர்கள் எவ்விதஆசை கொள்ளமாட்டார்கள் என்பதை வாசகர்களே யோசித்துக்கொள்ளட்டும். நமக்கு பல மொட்டைக் கடிதங்கள் கேவலமாகவும் வண்டத்தனமாகவும், மிரட்டுகலாகவும் எழுதிவருவதையும் பார்க்கும்போது அப்பார்ப்பனர்களின் ஆசையும் ஆத்திரமும் நன்றாய் விளங்குகிறது.

இதோடுகூட நாம் பிரசாரங்களுக்கு வெளியூர்களுக்குபோகிற இடங்களில எல்லாம் பார்ப்பனர்கள், மேல்கண்ட பார்ப்பனர்கள் ஆசைப்படுவதுபோல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளத்தக்க மாதிரியும் வேறு பல அதாவது திருவண்ணுமலை மதுரை முதலிய இடங்களில் பார்ப்பனர்கள்மேல் மேஜஸ்ட்ரேட்டு கோர்ட்டுகளில் முடிவுபெறுமவிருக்கும் பிராதுகளை எதிர்கக ஆதாரமாகவும் சில ஆதாரங்களை எற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அவையாதெனில், வேலூருக்குப் போயிருந்தபோது, "நாயக்கர் – கோவிலுக்குள் ஆதித்திராவிடர்களை கூட்டிக்கொண்டு போகப்போகிறார், எல்லோரும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்" என்று துண்டுப்பிரசாரம் வழங்கப்பட்டதும், நாகையில் நாயக்கர் ஆதித்திராவிடர்களை கோவிலுக்குள் கூட்டிப்போகப்போகிறார் என்று மேஜஸ்ட்ரேட்டுக்கு அறிவித்து பாதோபவஸ்துக்கு ஆள் கேட்கக்கேட்டு கூட்டிப்போனதும், கோவிலை

அனாவசியமாய் பூட்டிவைத்து ஜனங்களுக்குள் ஒரு தப்பபிப்பிராயத்தை உண்டுபண்ணுவதுமான காரியங்களைச் செய்துவருகிறார்கள். சர்க்காருக்கு தப்பபிப்பிராயங்கள் உண்டுபண்ணுவதைப்பற்றி நமக்கு கவலையில்லை. ஆனாலும் இதிலிருந்து இவர்கள் எண்ணத்தையும் ஆசையையும் பொதுஜனங்களே உணர வேண்டும். தனிர, நிருவண்ணாமலையில் அண்ணாமலையார் கோவிலுக்கு சுவாமி தரிசனத்திற்கு சென்ற ஸ்ரீமான் கண்ணப்பர் முதலியவர்களைத் தடுத்து சுவாமி தரிசனம் செய்யவொட்டாமல் கதவைப் பூட்டிக்கொண்டதாக ஸ்ரீமான் கண்ணப்பர் டிரஸ்டிபேரிலும் கோவில் மேனேஜர் பேரிலும் குருக்கள் பேரிலும் நிருவண்ணாமலை மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் பிராது கொடுத்திருக்கிறார். சரியோ தப்போ கோர்ட்டார் கிரமமாய் விசாரித்து நீதி செலுத்தி விட்டுவிடவேண்டியது எல்லோருடைய கடமையுமாகும். அப்படிக்கில்லாமல் இந்தப்பிராதை பார்ப்பனர்–பார்ப்பனரல்லாதார்கட்சிச்சண்டையாக எடுத்துக்கொண்டு பார்ப்பனர்கள் பெரிதும் இதில் கவலைவைத்து எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட்டு வருகிறது. முதலாவது அங்கிருந்த ஒரு பார்ப்பனரல்லாதார் மேஜிட்ரேட் திடீரென்று, விசாரணைக்கு இரண்டொருநாள் முன்பதாகமாற்றப்பட்டுஒருபார்ப்பன மேஜிஸ்ட்ரேட்டை அங்கு மாற்றப்பட்டிருக்கிறது. இதுதானாகவே ஏற்பட்டதாகச் சொன்னாலும் சொல்லலாம். அனாலும் இந்த குறிப்பிட்ட பிராதை சர்க்காராரும் ஒரு முக்கியமானதாகவும் ஜனங்களுக்குள் உணர்ச்சி உண்டாக்கக்கூடியதாகவும் உள்ள பிராது என்பதாக மதித்து கோர்ட்டுக்கு பந்தோபஸ்து முதலியவைகளை அனுப்பியிருக்கும்போது இம்மாதிரி உணர்ச்சியுள்ள கேஸ்விசாரணைக்கு தகுந்த மாதிரி பார்ப்பனரல்லாத மேஜிஸ்ட்ரேட் மாற்றப்பட்டு அதற்கு பதிலாய் ஒரு பார்ப்பன மேஜிஸ்ட்ரேட்டை போடுவதென்றால் எப்படி ஜனங்கள் சந்தேகப்படாமலிருக்கமுடியும்? தனிரவும் அந்த கேசுக்கு வக்கீலாய் வந்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, "இந்த இடத்தில் உள்ள மேஜிஸ்ட்ரேட்டுகளும், கோவாபரேட்டிவ் அதிகாரிகளும் அக்கிரமங்கள் செய்கிறார்கள்" என்றும் பொதுக்கூட்டத்திலும் சொன்னார் என்றால் மறு மேஜிஸ்ட்ரேட் மாறுதலுக்கும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் சொன்னதற்கும் சம்மந்தமிருக்கவேண்டும் என்று நினைக்க ஹேது இருக்கிறதா? இல்லையா? தனிர இந்த வழக்கிற்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி "வக்கீலாய் வர காரணமென்ன? இதிலிருந்தே இந்தக்கேசை பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்கிறகட்சிப் பிரச்சினையாய்ப் பார்ப்பனர்கள் ஏற்றுக கொண்டிருக்கிறார்கள் என்பதும், இதிலிருக்கும் இசகு பிசகுகளை கவனித்து இருவரையும் பிடித்து ஏதாவது ராஜசெய்து விட்டுப் போகலாம் என்கிற சமாதான உணர்ச்சியில் லாமல் ஒரு கட்சிக்கு வக்காலத்து போட்டு தனது எதிர் கட்சிக்காரரை 144 பிரிவுப்படி நடவடிக்கை நடத்தவேண்டுமென்று உபந்நியாசம் செய்துவிட்டு அந்த பிராது வாங்கின மாஜிஸ்ட்ரேட்டையும் பார்ப்பனரல்லாதார் என்பதற்காக வைவதும் என்றால் இப்பார்ப்பனர்கள் எவ்வளவுதூரம் நம்சமூகத்தின்மீது யுத்தத்திற்குத் தயாராயிருக்கிறார்கள் என்பதை வாசகர்களே யோசித்துப்பார்க்கவேண்டியதுதான். கேஸ் சரியா தப்பா? என்பதைப்பற்றியும் நாம் ஒன்றும் சொல்லவரவில்லை ஆனாலும், பிராதுகொடுத்திருக்கும் ஸ்ரீமான் கண்ணப்பர் பணக்காரரல்ல. இந்தப் பிராது பார்ப்பனர் பாப்பனரல்லாதார் முறையில் நடத்தவதாயிருந்தால் கண்ணப்பர் அவர்களால் தாக்குபிடிக்க முடியாது என்கிற சொல்லுவோம். பல வாய்தாக்கள் ஏற்படலாம். ஒவ்வொரு வாய்தாவுக்கும் 30, 40 செலவாகலாம். இது தனிர ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களைப் போல வே கட்சி உணர்ச்சியுடன் கேசை நடத்தக் கூடிய வக்கீல் ஒருவர் ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்களுக்கும் வேண்டும். அம்மாதிரியாராவது ஒருவர் தயாராக முன்வரவேண்டுமென்றால் வக்கீலுக்கு பீசு என்று குறைந்தது 100ரூபாயாவது வேண்டிவரும். ஆக சுயமரியாதையை உத்தேசித்து சாதாரண வழக்கமான உரிமைக்குப் போராட எண்ணிய ஸ்ரீமான் கண்ணப்பருக்கு இம்மாதிரி கொடுக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவர் என்ன செய்யக் கூடும்? கோர்ட் களில் சத்தியதீர்ப்பு பெற்றுவிடக் கூடும் என்று சொல்ல நாம் தயாராயில்லாவிட்டாலும் இந்தப்பிராது கட்சியுத்தமாக மாறிவிட்டதே என்கிற காரணத்திற்காக பயந்துகொண்டு நிருபம வாங்கிக்கொள்வதோ அல்லது எதிரியை கெஞ்சிக்கொள்வதோ வான காரியங்கள் ஏற்படுவது தானும் நம் சமூகத்திற்கே இதைவிட வேறு அவமானமும் சுயமரியாதை அற்ற தன்மையும் இல்லை என்றே சொல்லுவோம். தனிர பிள்ளை வாத்திற்குப்போய் புருஷனைப் பறிகொடுத்த பழமொழிக்கே ஒப்பாகும். ஆதலால் இது சமயம் பார்ப்பனரல்லாத பொதுமக்கள் பார்ப்பனர்களைப்போலவே இவ்வழக்கை பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் கட்சி வழக்கு என்பதாகக்கொண்டு ஒவ்வொரு பார்ப்பனரல்லாத வகீல்களும் தங்களால் கூடிய வகீல் உதவி செய்ய முன்வருவதுடன் மற்ற பார்ப்பனரல்லாத மக்களும் தங்களால் கூடிய பண உதவியும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். பார்ப்பனர்களுக்கோ பணதாராளத்திற்குக் குறைவில்லை "ஒரு நல்ல கொழுத்த ஆடு அவர்களுக்குக்கிடைத்திருக்கிறது" அதாவது இந்த நிருவண்ணாமலை வழக்கில் ஒருநாட்டுக் கோட்டை செட்டியார் கனவானும் எதிரியாய் இருப்பதால் நன்றாய் பணதாராளமாய் செலவுசெயயக்கூடும்ஜாதி அபிமானசலுகையையும்பணம் கொடுக்கத்தக்க செல்வவான்களையும் அடைந்திருக்கிறார்கள். ஆதலால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் நமது மக்கள் கேசு என்ன வாயிற்று என்று பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதில் பயனில்லை அது என்ன ஆனாலும் நமக்கு கவலை இல்லை. விரோதமாகும் என்பதாகவே நிர்ணயத்துக்கொண்டு தைரியமாக கர்ம செய்யவேண்டியது கடமைகளைச்செய்து நமது சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியதுதான். அதுகூலமானால் அதிர்ஷ்டம் என்று சந்தோஷப்படலாம். ஆனாலும் பணமில்லாமல் வக்கீல் இல்லாமல், பொதுமக்கள் ஆதரவில்லாமல், நமது சமூகத்திற்கு சுயமரியாதை இல்லாததால் கேசு கெட்டுப் போய்விட்டது என்று பலர் நம்மைப் பரிகாசம் செல்வதற்கில்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பதைப் பொதுமக்கள் ஞாபகத்துக்குக்கொண்டு வருகிறோம். இவ்வழக்குக்குதிகார்ட்டிலவழக்காடுகின்றமையையும் நியாயம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையையும் பிரதானமாய் கருதாமல் நமது சமூகத்தின் சுயமரியாதையை உத்தேசித்து ஸ்ரீமான் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் ரூ 50 உதவித் தொகையாக கொடுத்திருக்கிறார். இனியும் இதற்கு யாராவது பணம் அனுப்புகிறவர்கள் சென்னை பவழக்காரத் தெரு 6—99 ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்கள் பேருக்கு அனுப்பவேண்டியது. இந்த தொகையை ஸ்ரீமான் கண்ணப்பர் அவர்கள் இந்தக் கேசைப்பொறுத்தவரையில் செலவு செய்து கொள்ளலாம். மற்றபடி மீதி இருந்தால் இதைபோன்ற காரியங்களுக்காவது "திராவிடன்" பத்திரிகையின் உதவிக்காவது உபயோகித்துக்கொள்ளலாம்—கொடுக்கடியான சமயத்தை வேடிக்கையாய் கருதாமல் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சக்திக்கும் இஷ்டத்திற்கும் தகுந்த படி ஏதாவது அனுப்பிக்கொண்டுக்க வேண்டுகிறோம்.

முனிசிபல்பொதுரோட்டுகளில் மக்களுக்கு உள்ள சுதந்திரம்

பார்ப்பனரல்லாத ஜட்ஜிகளின் தீர்ப்பு.

எழுனட்டு மாதகலுக்கு முன்பு பாலக்காடு கலபாத்தி ரோட்டில் ஒரு ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த ஊழுவர் ஸ்ரீ சங்கரன் என்பவர் சர்க்கார் வேலை பாக பைசைக்கிள்மீது சென்றதற்காக அவ்வீதியில் உள்ள ஒரு பார்ப்பனர் அவரைத் தடுத்து, நிறுத்தி மிரட்டி ரோட்டிற்கு புண்ணியார்ச்சனையும் கும்பாபிஷேகமும் செய்ய 15 ரூபாய் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தி வண்டியையும் மேல் வேஷ்டியையும் பிடுங்கிவைத்துக் கொண்டதற்காக, போலீசார் இவ்விஷயமறிந்து ஸ்தலத்திற்குப்போய் பைசைக்கிளையும் வேஷ்டியையும் பிடுங்கிக கொடுத்துவிட்டு அந்தப் பார்ப்பனர்மீது கிரிமினல் கடவடிக்கை நடத்தினார்கள். அதில் பார்ப்பனருக்கு 30 ரூபாய் அபராதம் விழுந்தது. அதன்பேரில் பார்ப்பனர்கள் ஐகோர்ட்டில் அப்பீல்செய்து கொண்டார்கள். அப்பீலில் பார்ப்பனரல்லாத இரண்டு ஐகோர்ட் ஜட்ஜிகள் பார்ப்பனர் செய்தது அக்கிரமமென்றும் ஜனங்கள் வரிப்பணத்தில் முனிசிபாலிட்டியாரால் பரிபாலிக்கப்படும் எந்த ரோட்டிலும் யாரும் நடக்கலாம் என்றும், பார்ப்பனர் 30 ரூபாய் அபராதம் கொடுக்கவேண்டியதுதான் என்றும் தீர்ப்புச் சொல்லிவிட்டார்களாம். இது மிகவும் சந்தோஷப்படக்கூடிய விஷயம் என்பதில் சந்தேகமில்லை. இதே ஐகோர்ட் ஜட்ஜ் ஸ்தானத்தில் வர்ணாசிரம பார்ப்பனரோ அல்லது

தன்னை உயர்ந்த ஜாதி என்று பிரசாரத்துக் கொண்டிருக்கும் பார்ப்பனரோ அல்லது பார்ப்பனர் சொல்லுப்படி ஆடுகிற பார்ப்பனரல்லாதாரோ (நமது மந்திரிகளைப்போல்) ஜட்ஜிகளாய் இருந்திருந்தால் இந்த தேசின் முடிவு இப்படியிருக்குமென்று உறுதிகூற முடியுமா? ஜட்ஜிமெண்டு என்பது மிகப் பரிசுத்த ஜட்ஜிமெண்டு என்பதே அவரவர்கள் மனச்சாக்ஷியைப் பொறுத்ததாகத்தானே இருக்கும். மனச்சாக்ஷி என்பதே எல்லோருக்கும் ஒன்றுபோல் இருக்காது. ஐரோப்பியருக்கு மாடு சாப்பிடுவது மனச்சாக்ஷிக்கு விரோதமாகாது. பார்ப்பனரல்லாதவருக்கு மாடு தின்பது மனச்சாட்சிக்கு விரோதமென்பதாகக் கொண்டாலும் பார்ப்பனருக்கு இவர்கள் சாப்பிடுவதைக் கண்ணாலும் பார்க்கக்கூடாது என்பது மனச்சாக்ஷிக்கு விரோதமாகத்தான் வருகின்றது ஆகையால் இதே ஜட்ஜிஸ்தானத்தில் ஒரு வாஞ்சியோ பார்ப்பனர் இருந்தால் அவர் கண்டிப்பாய் இந்த மோட்டில் நடந்தது தப்பு என்றும் மோட்டை அபராதம் வாப்பீஸ் செய்து நடந்தவனை தண்டிக்கவேண்டுமே என்று சொன்னால்தான் அவர் மனச்சாக்ஷிப்படி நடந்தவராவார். அதனால்தான் காரும் கமது சுபமதிப்பையும் மனசாக்ஷியையும் உத்தேசித்து ஜட்ஜி முதல் எலா ஸ்தானங்களிலும் பார்ப்பனல்லாதாரே இருக்கவேண்டுமென்று கோருகிறோம் அல்லாமல் மேலில்லை இதுபோலவேதான் பார்ப்பனர்களுக்கு தங்களது ஆதிக்கத்தை உத்தேசித்து பார்ப்பன ஜட்டிகளே இருக்கவேண்டுமென்று கோருகிறார்கள். அவர்கள் கோருவதைப் பற்றி நாம் அவர்கள்மேல் குற்றம் சொல்ல மாட்டோம். ஆனால் அது நிறைவேறினால் நமது சமூகத்திற்கும் நமது சுயமரியாதைக்கும் ஆபத்து என்பதால்தான் சொல்லவேண்டி யதாகின்றது. ஆதலால் நாம் கூடிய சீக்கிரம் நமது கடன் வசூலிக்கவேண்டியதும் நமமுடைய கடன் வசூலிப்பதும் ஆகிய 4000, 5000 சமபளம் வாங்குவதாலும் அவர்கள் ஜாதி வக்கீல்களையே முன்னுக்கு கொண்டுவர எற்பாடு செய்து அவர்களுக்கு அனுகூலம் செய்து நம்மை ஜாதி வக்கீல்களை நிறுமைப்படுத்தி விரோதம் செய்வதினாலும் பற்றாக்குறை அவர்கள் ஜாதிபாருக்கே முனிசிப்பு, சப்-ஜட்ஜி, ஜட்ஜி முதலிய உத்தியோகங்கள் கொடுத்து நம்முடைய ஜாதியாரின் உரிமையை ஒழிப்பதினாலும் நமக்கு அவ்வளவு ஆபத்திருப்பதாய் காம் நினைப்பதில்லை. ஆனால், கல்பாத்தி பொது ரோட்டு வழக்கை உரிமை போன்ற விஷயங்களில், பார்ப்பன ஜட்ஜிகளிடம் இருந்தும் பார்ப்பன சட்ட மெம்பர்களிடமிருந்தும் நமது சுயமரியாதைக்கு அனுகூலமான நிர்ப்பு பெறமுடியுமா என்கிற விஷயத்தில் தான் பயமாயிருக்கிறது உதாரணமாக கல்பாத்தி ரோட்டில் யாரும் நடக்கலாம் என்று சட்ட சபையில் சிர்மானம் எற்பட்டும் சட்ட மெம்பர் ஸ்ரீமான் சர் சி. பி. பார்ப்பனர் வேலியிருந்தால்தான் போகலாம் என்று சொல்லி விட்டாரே அதை நாம் மறக்கலாமா? அதுபோலவே இந்த வழக்கும் பார்ப்பன ஜட்ஜி தீர்த்தால் ஈழவர் அந்த ரோட்டில் நடக்க முற்றுமாஜரூர் நடக்க உரிமையில்லை என்றும், அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கடக்கவிடாமல் செய்ய வேண்டியதே அல்லாமல் கடுத்தது குற்றம் என்றுவது கொல்லி ஆபாதத்துக்காயம் செய்ய அவரது மனச்சாக்ஷி சொல்லுமே அல்லாமல் பார்ப்பனரல்லாத ஜட்ஜிமெண்டுபோல் சர்க்கார் பொது ரோட்டில் யாரும் தாராளமாய் போகலாம் என்று தீர்ப்பு இயற்றக் தர்மத்தை, சொல்லிவிடுவார் என்று எண்ணை நமக்கு தைரியமில்லை. இது எப்படியோ இருக்கட்டும். இனியாவது பல்கலைக்கழக பார்ப்பனர்கள் கல்பாத்தி ரோட்டில் யாருமே நடக்க சுதந்திரம்தான் பெறவேண்டும் என்று அந்த தீர்ப்பை வாங்கி பாலக்காட்டு முனிசிப்பு கோர்ட்டில் நிறைவேற்றி சர்க்கார் பந்தோபஸ்துடன் போய்க்கொண்டு இருக்க வேண்டுமா என்றுதான் கேட்கிறோம். அது போலவே திருநெல்வேலி சந்தியாசி அய்ங்கார் ஹரப் பார்ப்பனர்களுக்கும் கும்பகோணம் அய்யங்கார் தெரு, வியாசராய மடத் தெரு, பட்டாச்சாரி தெரு பார்ப்பனர்களுக்கும் இந்த தீர்ப்பே போதுமா அல்லது அங்கும் பெரிய கிளர்ச்சி செய்து பார்ப்பனர்களின் அட்டூழியங்களை மகாஜனங்களுக்கு வெளிப்படுத்தி சுதந்தியாக்ரகம் செய்து ஜெயித்துக்குப்போய் ஐகோர்ட்டுக்குப்போய் "ரிட்" பெறவேண்டுமா என்றுதான் கேட்கிறோம். அல்லது மகாத்மா இந்த உலக்கை நூறு வருஷ சமயம்பார்த்து இந்த தெருவுகளில் நுழைந்து இந்த பார்ப்பனர்களின் நிலைமையை அவர் அறியச்செய்ய வேண்டுமா என்றுதான் கேட்கிறோம். ஆனால், இந்தப் பார்ப்பனர்கள் எதற்கும் பயப்படமாட்டார்கள். ஏனெனில் ஐகோர்ட், கவர்ன்மெண்டு, சட்டமெம்பர், சட்டசபை மற்றும் அதிகாரம் செல்வாக்கு முதலியவைகளில் அவர்கள் இருப்பதால் இந்தியெல்லாம் காலு சிக்கு சமானமாய்தான் நினைப்பார்கள். ஆனாலும் பாமர மகன்கள் இவ்வாறில்லை ஆசாட்சியிலேயே தெருவில்நடக்கதருவைத்தாடாமலைபைசக்கினால்மேல்போகவிடமாட்டோம் கொடுக்கமாட்டோம் இக்கலெஞ்சகூட்டங்கள் தங்களுக்குரிய ஆட்சிவந்தல்லப்படி நடப்பார்கள்? நம்மை எவ்விதம் கொடுமை செய்வார்கள்? நம்மை மனுதர்மசாஸ்திரமோ பாகவல்மிருதியோ அல்லது இதில்பட்ட ஆச்சாரியாரையோ தான் ஆளுவார்கள் ஆனாலும் மக்களுக்குசுயமரியாதை உணர்ச்சிவந்து விட்டால் பிறகு என்ன ஆகும் என்பது தான் நமது கவலை.

பார்ப்பனியப்பித்தலாட்டம்
"சிரார்த்த சந்தேகம்"

ஸ்ரீ சங்கராச்சாரியார் மடம் ஆஸ்தான வித்துவான் ஸ்ரீ வெங்கிட்டராமசாஸ்திரியை சிரார்த்த விஷயமான பல சந்தேகங்களைப் பற்றி ஒரு கண்பர் எழுதிக்கேட்டிருந்தாராம். அதற்கு பதில் எழுத சாஸ்திரிக்கும் சாவகாசமில்லையாம். குடும்பவிஷயமாக திருமத்திற்குப்போய்விட்டாராம். மித்திரனிலும் இடம் ஒதுக்க முடியாதாம். பகரிரிகைகள் மூலம் இம்மாதிரி சந்தேகங்களைப்போக்காமல் ஜகத்குருசாமிகள் என்ன பலன் பூரியதர்மம் என்றுஒரு பத்திரிகை போடுவாராம் அதை வாங்கிப்படித்தால்சந்தேகமெல்லாம்தீர்ந்து ஆகி விடுமாம். இது ஸ்ரீ சோமதேவ சர்மா என்கிற ஒரு பார்ப்பனர் பேரால் 10-3-27 தேதி மித்திரனில் பிரசுரித்திருக்கிறது. இது என்ன புரட்டு? கள்ளு சாராயம் விற்பதிலிருந்து கைகால் இடமிருக்கிறது வருணாசிரம தர்மம், ஆரிய தர்மம், பிராமண தர்மம், சனாதன தர்மம், இந்து தர்மம் என்கிற பார்ப்பனர்கள் பிழைப்புக்கு ஏற்பட்ட மதவிஷயங்களைப்பற்றி பிராமணர்களுக்கும், சாஸ்திரிகளுக்கும், சர்மாக்களுக்கும், சாவகாசமிருக்கிறது. யாருகளாவது இதில் சந்தேகப்பட்டால் அதைவிளக்க சாஸ்திரிகளுக்கும் சாவகாசமில்லை. பார்ப்பனப் பத்திரிக்கைகளுக்கும் இடமில்லை என்றால் பார்ப்பனப் புரட்டுகளுக்கு இரை விட வேறு எனன சாகவேண்டும்.

சத்தியமூர்த்தியின் அழுகை
திரு. சர் சி. பி. ஐயர்வர்கள் ஆறுதலளிப்பாரா?

வகுப்புத் துவேஷமும் 153-வது பிரிவும்.

(மன்னார்குடி காரி ஸ்ரீமதி மீனாக்ஷி அம்மாள் தினவிடனில் எழுதுகிறார்.)

திரு. மூர்த்தி தமது ஜாதியாரின் பாதுகாவலின் பொருட்டு அண்ணாமலைக்குச் சென்றார். பார்ப்பன கட்சியான காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சி இருக்கிறதென்பதற்காகவோ அச்சபையின் ஆதரவில் கூடிய ஓர் சின்னம் சிறு கூட்டத்தில் மூர்த்தியின் அழுகை சேட்கை சௌகரியமமைக்கப்பட்டதாகவும், அகில திருவண்ணாமலை ஜனங்கள் தங்களை யோக்கியர்களாக நம்முதலில் நம்பியது போலவே இன்னமும் இருக்கவேண்டுமென்றும், பார்ப்பனரல்லாதார் சங்கத்தில் ஜன சமூகம் ஊக்கம் காட்டுவது தமக்கு தக்கம் மிக அறிமானின்றமென்றும், அது ஜாதித துவேஷத்தை வளர்த்து வருகிறதென்றும், ஜாதித்துவேஷத்தை வளர்ப்பவர்கள் அடக்க இ. பி. 153 செக்ஷனை உடனே உபயோகிக்க வேண்டுமென்றும், ஜன சமூகத்தை மிரட்டி ஜாதித்துவேஷத்தை ஒழிக்க சகலரும் தமது காங்கிரஸ் சுயராஜ்ய கட்சியில் சேரவேண்டுமென்றும் கூறி மற்றும் ஏதோ பிதற்றி கண்ணீர் விட்டார்.

இம மூன்று மாதத்தில் மூர்த்தியின் கூட்டத்திற்கு எற்பட்ட கெடுமையை நினைத்துக் கண்ணீர் விடுவது நியாயமே! ஆனால் சட்டத்தின் மூலம் நமது இயக்கத்தை ஒடுக்க விரும்பும் மூர்த்தியின் பிதற்றலுக்கு தமிழர் ஆதரவுமுற மாட்டார்கள் என்றே நமபுகிறோம். திரு மூர்த்தியின் வாக்கு தேவ வாக்காம் இதை "இராமசாமி" கவனியாது போகும்.

நாம் கேட்பதும்

அது தான் என்பதை திரு. சட்ட மெம்பருக்கும் சட்டசபை மெம்பருக்கும் மிகப் பணிவுடன் அறிவித்துகொள்வோமாக. தமிழ் நாட்டின் 3 கோடி மக்களின் பாதுகாவலர்களான ஐயர்மார்களே தாங்கள் உடனே அச்சட்டத்தை அழுலுக்கு கொண்டுவந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும். இப்பெரும் புத்தியை மூர்த்திகளித்த அண்ணாமலை நாதரை நாம் பணிவோம்.

தஞ்சை ஜில்லா 6-வது பார்ப்பனரல்லாதார் மகா நாட்டின் வரவேற்புக்கழகக் கூட்டம்.

7-3-27 மாலை 5மணிக்கு தஞ்சை (புது) ஜில்லா போர்டு மீட்டிங்கு ஹாலில் ஜில்லா மகாநாட்டின் வரவேற்புக்கழக உறுப்பினர்களின் முதல் கூட்டம் கடைபெற்றது.

ஜில்லா போர்டு தலைவர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை வகித்தார். அடியிற்கண்ட அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமான்கள் ஈரோடு ஈ. வெ. இராமசாமி நாய்க்கர், ராவ்பகதூர் S. A. S. R. M. இராமநாதன் செட்டியார், ஜில்லா போர்டு தலைவர் ஏ. டி. பன்னீர்செல்வம், ஜில்லா போர்டு உப தலைவர் என். ஆர். சாமிப்ப முதலியார், பட்டுக்கோட்டை எஸ். வேணுகோபால நாயுடுகாரு பி. ஏ., பி. எல்., மனேஜ்துனேஜிதசிகர், எஸ். தில்லை நாயகம் பிள்ளை, மாயவரம், என். டேவிட் நாடார் மாயவரம், கே. சி. ராஜதுரை செட்டியார், மாயவரம், ஆர். கந்தசாமி மூப்பனார் பி. ஏ. பி. எல்., ஆர். சி. வெங்கட்டராம நாயுடு, டி. வி. உமாமகேஸ்வரம் பிள்ளை, டி. குமாரசாமி பிள்ளை, கே. கல்லமுத்து நாட்டார், கே. பொன்னுசாமி நாயனார், எஸ். மருதையா பிள்ளை, அழகிரிசாமி நாயுடு, மாணிக்கம் பிள்ளை, சிவஞானதன் செட்டியார், கந்தசாமி பிள்ளை, முத்தைய முதலியார், எஸ். ரீத்தினம் பிள்ளை, சின்னையா பிள்ளை, கோராஜ முதலியார், டி. ஆர். சாமதாஸ் சாஹேப் தஞ்சை, டேனிஸ் முக்துசாமி உடையார், சேகா பாலசாமி முதலியார், சம்பந்தம் பிள்ளை, ராமச்சந்திர செட்டியார் முதலிய பிரபல பிராமணரல்லாத கனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். நட்டிடையைக் கவனிக்க வந்திருந்த முக்கிய கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

உபசாரணைக்கழக நிர்வாகிகள்.

மயூரமணி ஆர். சின்னையா பிள்ளை அவர்களின் பெயர் வரவேற்புக்கழகத்தலைவராக இருக்கவேண்டுமென வைக்கம் சத்தியாக்கிரக வீரர் உயர்திரு இராமசாமி நாயக்கர் அவர்களால் சிபார்சு செய்யப்பட்டு, ஏ. டி. பன்னீர்செல்வம், உமாமகேஸ்வரம் பிள்ளை, ராவ்பகதூர் S. A. S. R. M. R. செட்டியார் ஆகிய பிரபல பிராமணரல்லாதார் தலைவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. என். டேவிட் நாடார் அவர்கள் உபதலைவராகவும், எஸ். தில்லைநாயகம்பிள்ளை அவர்கள் பொக்கிஷதாராகவும், கே. சி. ராஜதுரை செட்டியார், சி. நடராஜ முதலியார் ஆகிய இருவரும் நிர்வாக காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் 6-20-க்கு கூட்டம் இனிது முடிவுற்றது மாலையில் பொதுக்கூட்டம் கடை பெற்றது.

நீருத்துறைப்பூண்டி:—இவ்வூரில் நிறுவப்பட்டுள்ள "வில்வாரண்ய சபை" யாரால் புதுத்தெருவில் திருவாளர் ஏ. டி பன்னீர் செல்வம் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு இலவச வாசகசாலை திறந்துவைக்கப்பட்டது என திருவாளர் டி. வி. சுந்தரம் அறிவிக்கிறார்.

தேவாங்கசுலமுன்னேற்ற சபை, அநுப்புதூர் கோடை:—23—2—27 தேதி ஷை சபையின் அங்கத்தினர்கள் ஒரு கூட்டம் கூடி இச்சபை வாசகசாலையின் ஆண்டு நிறைவு விழா திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் தலைமையில் வருகிற பங்குனிமாதம் 2வது வாரத்தில் கூடத்துவதென தீர்மானித்தாகளென பிரஹிடெண்டு எஸ். மல்லையா அறிவிக்கிறார்.

"சுதேசமித்திரன்" என்னும் சுஜாதிமித்திரனுக்கு ஓர் எச்சரிக்கை

இம்மாதம் 8ந் தேதி சுதேச மித்திரன், 'பனகால் ராஜாவின்' பரிகாரம் என்ற தலைப்பில் விவசாயிகளின் வருமானம் குறைந்திருப்பதால் கடன் வாங்கும்போது பத்திரங்களும், பதிவு சட்டணங்களும், அதனால் ஏற்படும் கோர்ட்டு விவகாரங்களுக்கு வாங்கும் கோர்ட்டு பீஸ் ஸ்டாம்புகளும் அதிகமாக இருப்பதால் ஸ்டாம்பு வீலை குறைப்பது அவர்கட்கு நன்மையென்றும் அதற்கு மாறாக நிர்ம வைத்தியசாலை ஏற்படுத்துதலும், கல்விச்சாலை திறுவதலும் அவசியம் என்று கூறிய நம் தலைவர் கூற்றுக்கள் எல்லாம் உளறலாகும் என்றும் பிறதிரல்லாம் மதியில்லார் என்று கருதி எழுதுகின்றன். இவன் விவசாயிகளிடம் அபிமானம் காட்டுவது ஆட்டுக்குட்டியினிடம் ஓநாய் காட்டும் அபிமானத்திற் சிறிதும் குறைந்ததன்று என்பது மிகையாகாது. நம் தலைவர் அவர்கள் விவசாயிகளின் பணக்கஷ்டத்தை நீக்க ஏற்படுத்திய நாணயச் சங்கங்கள் வேலை செய்வதற்கு முன்பாகவும் அதற்கு பின்னரும் கடன் வாங்குவோர்க்கு ஸ்டாம்பு செலவு, பதிவுச்செலவு கோர்ட்டுச்செலவு எல்லாம் கிடையாது என்பதை உட்கொண்டு ஸ்டாம்பு வீலையைக் குறைப்பதைவிட வைத்தியம், கல்வி இவற்றில் அப்பணத்தைச் செலவிடுவது நலம் என்று வற்புறுத்தினார்கள். இதை சுதேசமித்திரனும் உணர்வான். ஆனால் ஐக்கிய நாணயச் சங்கத்தால் கிராமத்தாரிடம் ஒற்றுமை நிலவியதன் மேல் கோர்ட்டு விவகாரங்கள் குறைந்து தாயினத்தவராகிய வக்கீல்களின் வரும்படி குறையும் என்று கருதி மேற்கண்டவாறு உளறி நீலிக் கண்ணீர் விடுகிறான். இவன் உளறுதலை கிராமவாசிகள் தெரிந்துகொண்டதை அறிந்தபின்னாவது அடங்குவது அவனுக்கு நன்மை என்பதை யறிவானாக.

கிராமவாசி.

மருத்துவர் தயாரம்.

திருநெல்வேலி ஜில்லா ஷை தாலூகா சிவலப்பேரி கிராமத்தில் வசிக்கும் மருத்துவர்கள்தங்கள் பொதுச்சங்க நோக்கத்தின்படி மயானத் தொழிலை நிறுத்திவிட்டார்கள். அதனால் அவ்வூரில் வாழும் வேளாளர்கள் கூடி மருத்துவர்களுக்கு இதர தொழிலாளிகள் ஒரு தொழிலும் செய்யக்கூடாதென்றும் கடைகளில் சாமான் முதலியன கொடுக்கக்கூடாதென்றும் கட்டுப்படுத்தினதுடன் மருத்துவர்கள் சொந்தமாய் கிராயத்துக்கு வாங்கி அனுபவித்துவருகிற நஞ்சை இப்பொழுது அறுவடைக்குத் தயாராயிருக்கும் சமயத்தில் மாசூல் அறுக்கப்படாதென்றும் மறவர்களைக்கொண்டு தடுத்திருக்கிறார்கள். ஷை நஞ்சை நிலத்தண்டை போலவே கால்கைகளை முறித்துப்போடுவதாயும் எச்சரித்து வருவதுடன் ஷை மறவர்கள் மருத்துவர்கள் வீட்டை கொள்ளை போடுவதாயும் தீயில் காளுத்திவிடுவதாயும் எச்சரித்து வருகிறார்கள். பெண்டு பிள்ளைகளை தண்ணீருக்குப் போகவொட்டாமலும் தடுத்திருக்கிறார்கள். இன்னும் பலவித துன்பத்துக்கு வருந்தி தவிக்கிற மருத்துவர்கள் ஒரு கதியுமன்றி சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட்டார், அவர்களுக்கும் ஜில்லா சூப்பிரண்டெண்டவர்களுக்கும் மனுச் செய்திருக்கிறதாகமருத்துவசங்கக் காரியதரிசி திரு இ. முத்துசுவாமி அறிவிக்கிறார்.

நாடார் மகாஜன சங்கம் மதுரை:— ஷை சங்கவுன்சிலின் ஜூடினரி மீட்டிங்கு 12—3—27 உ சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கம் ஆபீசில் கூடைபெறும் என்று காரியதரிசிகள் அறிவிக்கிறார்கள்.

சகோதரி சகோதரர்களுக்கோர் விண்ணப்பம்.

முதன் முதல் காந்தியடிகள் தமிழ் நாட்டில் அநேக விடங்கட்குச் சென்று கதரியக்கத்தைப்பற்றி வலியுறுத்தினார். நமது கோபி—பவானி தாலூகாக்களுக்கு அடிகள் வராவிட்டாலும் பத்திரிகை வாயிலாகவும் என்னேயோர்களாலும் கதர் உண்மை உணர்ந்து அந்திய நாட்டுத் துணிகளை பஹிஷ்காரம் செய்து மிகுதியாகக் கதர் கட்டிவருகிறோம். பணக்காரர்களும் பார்ப்பனர்களும் இவ்விஷயத்தில் அதிதக்தைகாட்டி விட்டமையால் ஹக்கங்குன்றி பழையகுருடி ஆகிவிட்டது. ஆனால் ஈரோடு "குடி அரசு" ஆசிரியரும் "சுயமரியாதை" தான் ஒவ்வொருவருக்கும் பிரதானம் என்று அதை நிலை நாட்ட இராப்பகலாய்த் தனது ஓயா உழைப்பால் நிறுவி வரும் வீரருமான ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் இப்பக்கம் சில மாதங்கட்கு முன்னர் ஒரு பிரசங்கம் செய்து போனதின் காரணமாய் சொற்ப பேராவது விட்டகதரைக் கட்ட ஆரம்பித்துக்கொண்டார்கள். ஆனதால் கோபி—பவானி தாலூகா இராம சுயேகாதரி சுயேகாதரர்களே! நமது பழைமையான நாட்டினத்தைச் சுற்றினால் தான் சுதந்திரமோட்சம் உண்டு நமக்குள் ஒற்றுமை உண்டாக்கும் தெய்வம் அதுதான். சமத்துவக்கொள்கையைத் திரும்ப கற்பக தரு நாட்டினமே! ஆதலால் இன்றே கதர் மயக்கம் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் சராசரி 30 ராட்டையாவது சுற்றும் படி செய்தால் தான் உலகம் புகழும் உத்தமரான காந்தியடிகளின் புண்ணிய திருவடிகள் நமது தாலூகாக்களில் படக்கூடும் ஆசியும் கிடைக்கும். இந்த நல்ல சமயத்தை இழந்து விடாதீர்கள். விழிமின்! எழுமின்!! உழைமின்!!!

கொ. ந. பொன்னம்பலம்,
கொக்காரப்பாளையம்.

பிராமணரல்லார் இளைஞர் சங்கம்(கிளை) தருமபுரி:— 8—3—27 ஷை சங்கத்தின் ஆதரவில் "விவேகானந்த சுகர மாளிகையில்" ராவ் சாஹிப் எஸ். எல்லப்ப செட்டியாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்த கூட்டத்தில் மணிமேத்தங்கரை வி. குப்புசாமி செட்டியாரவர்கள் "மதுரை மகா நாட்டைப்பற்றி" ஒரு பிரசங்கம் புரிந்தார்களென்றும், சேலம் ஜில்லா பிராமணரல்லாதார் மகாநாடு உடனே கூடித் தமது தலைவர்களை கேட்டுக்கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டதென்றும் பொதுக் காரியதரிசி அறிவிக்கிறார்.

தூத்துக்குடி தாலூகா ஆதிதிராவிட சங்கம் 26—2—27 உ மாலை 6 மணிக்கு புதூர் ஆதிதிராவிட தெருவில் ஸ்ரீமான் எஸ். மாரிமுத்து அவர்கள் தலைமையில் கூடைபெற்றது. 100 பேர் வந்திருந்தனர். சபைமேளவாத்தியம், பஜனைகோஷ்டியுடன் ஆரம்பிக்கப்பட்டது ஸ்ரீமான்கள் எஸ். வேலாயுதம், எஸ். கந்தசாமி முதலியவர்கள் பிரசங்கித்தார்கள். தலையார் முடிவுரையுடன் இரவு 10 மணிக்குக் கூட்டம் கலைந்தது என ஸ்ரீமான் சோக்கன் கந்தசாமி அறிவிக்கிறார்.

செய்தித்திரட்டு.

பூனாவேடில் விவசாயிகளின் கூட்டம்:—நில அடமான பாங்கு ஏற்பாட்டு விஷயமாக 9—8—27 ந்தேதி பூனாவேடு சர்ஜன வைஸன் கூலில் விவசாயிகளின் கூட்டம் கூடியது. இச் சமயம் சென்னை மாகாண கோஆப்பரேடிவ் ரிஜிஸ்ட்ரார் மிஸ்டர் எச் எம். உட் ஐ.சி.எஸ்., பி. இ. அவர்கள் விஜயம் செய்தார்கள். கூட்டத்தின் பிரதிநிதியாக ஸ்ரீமான் பி. எஸ் கெர்கா காட்டவர்கள் மேல்சண்ட நிஜிஸ்ட்ரார் அவர்கட்கு பாங்கு விஷயமாகச் சில விதிகளைத் திருத்தியமைக்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்.

அவையூரனை:—நில அடமான பாங்கி மூலம் ஏற்கனவே 2000ரூ (இரண்டாயிரம்) தான் கடனுகப்பெறலாம் என்றுள்ள விதியை 5000 (ஐயாயிரமாகத் திருத்தவும், டிபன்சர்களைக் குடிகளே முதலில் எடுக்கவேண்டு மென்றிருப்பதைக் கவர்ன்மெண்டாரே முதலில் எடுக்கவேண்டுமென்று திருத்தவும் கேட்டுக்கொள்ளப்பெற்றது. இதற்கு ரிஜிஸ்ட்ரார் அவர்கள் அளித்த பதிலாவது:—கவர்ன்மெண்டார் எழைக்குடியானவர்களாக உள்ளவர்கட்கே சிறிய தொகைகள் உதவி செய்வதாக உத்தேசித்திருப்பதாகவும், மேலும் கவர்ன்மெண்டாரால் நான்கு லட்சம் ரூபாய் மதன்னே பாகாணம் முழுவதும் நில அடமான பாங்கிச்சென்று ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதாகவும் ஆதலால் கேட்டுக்கொண்டிருக்கும் திருத்தம் செய்யக் சாத்தியமில்லை யென்றும் சாந்தமாகப் பதிலளித்தார்கள். மேலும், இச்சென்னை மாகாணத்திற்கே 8 நில அடமான பாங்குகள் தான் ஏற்படுத்த உத்தேசமாம். பாங்கு 1-க்கு ஒருலட்சம் மூலதனத்திற்கு மேல் இருக்கக் கூடாதாம். இன்னோரன்ன விஷயங்களைத் தெரிந்து கொள்ள ஆறுமாத காலமாய்க் கடிதப்போக்கு வரத்து நடத்திவந்தோம். கூடிய சீக்கிரம் பூனா மேட்டில் இந்த பாங்கு ஏற்படும். ஆனால் இந்த பேங்கியின் எல்லையோ ஐந்து மைலுக்கு மேல் கிடையாதென்பதை ஞாபகப்படுத்துகிறேன். இவற்றையெல்லாம் நினைக்கின் நமது கவர்ன்மெண்டைக் காருண்ய கவர்ன்மெண்டார் எனவும், எழை மக்களின் நேசகர்கள் எனவும் பாராட்டிச் சீராட்டித் தாலாட்டுவதா? அன்றி..... .....விடுவதா? நம் சோவை நில்லாவிலும் பொதுவாக இந்தியாவிலும், எழை விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் கடன்பட்டுக் கலங்குவதற்குக் கலியுகத்தில் எந்த இராவணனை ஒப்பிடுவது அந்தோ! ஆங்கில அரசாங்கமே! இரும்பத்தூண்களாம் இந்திய சிவில் சர்விஸ் வர்க்கமே! துணிவிலாத் திருமூர்த்திகளாம் மந்திரி வர்க்கமே எழை விவசாயிகளை நினைத்துப் பார்த்து கடவுளுக்கஞ்சி இவ்வாண்டு நடைபெறும் பட்ஜட்டிலாவது நில அடமான பாங்கு நலம்பெற அமைய நாலு லட்சத்தை நாலுகோடியாக மாற்றி மங்களமுறச் செய்வீர்களாக என்று பூரீ வாசி எழுதுகிறார்.

* * * *

விருது நகரில் ஜஸ்டிஸ் கோக்கோலாட்டம் 26—2—27 தேதியில் இவ்வூரில் ஜஸ்டிஸ் பத்திரிகையின் அவசியத்தைப் பற்றியும் அக்கட்சியின் தத்துவத்தை விளக்கியும் ஒரு மீண்ட துண்டுப் பிரசுரம் பரப்பப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு தொ. ம. ச. ம, அவர்கள் கிட்டங்கியின் மேல் மாடியில் ஸ்ரீமான் டி. கி. கைலாசஞ் செட்டியார் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றியும் "ஜஸ்டிஸ்" "திராவிடன்" "குடி அரசு" ஆகிய பத்திரிகைகளை விசேஷமாகப் பாப்பமேண்டியதைப் பற்றியும் ஸ்ரீமான்கள் குரைராஜ் பிள்ளை, எம். பி, சுந்தர பாண்டிய நாடார், வி. வி. இராமசாமி நாடார் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். சபைவர் முடிவுரையுடனும் வந்தேமாதரத்துடனும் கூட்டம் கலைந்தது. மறுநாள் "ஜஸ்டிஸ்" தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, பார்ப்பனரல்லாதாருள் ஒற்றுமையை நிலைநிறுத்தியவரும் அ. சு. தொ. சு. க. அவர்கள் அழகிய சிங்காரத் தேரில் ஒரு சமபந்திபோஜன விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. பிள்ளை, செட்டியார், நாயுடு, தேவர், ஆதிதிராவிடர் எல்லாரும் ஒரே பந்தியிலுட்கார்ந்து நளபாக சக்கரவர்த்தி எஸ். பாலப்ப நாடாரால் தயார் செய்யப்பட்ட அறுசுவையுணவை அருந்தியின்பற்றனர் என்ற பார்ப்பனரல்லாதார் வாஸ்பர் சுகக் காரியதரிசி திரு சே. நம்பர்தன அறிவிக்கிறார்.

மதிப்புரை.

கணபதி:—

இது திருவாளர் பி எம் முருகேச முதலியார் அவர்களால் விசாயக் கடவுளின் மகாத்மை பொருந்தி இயற்றியதை எட்டியபுரம் சுடிகை. நமசிவாயப்புலவரவர்களால் தமிழில் விருத்தயாப்பில் மொழிபெயர்க்கப்பட்டது. ஐயார் மருகர் புலவர் சண்முகம் பிள்ளையவர்களால் 2-வது பதிப்பாக வெளியிடப்பட்டது விலை அணு 4.

இடைக்குமிடம்:—

அ முத்துச்சாமி பிள்ளை,
மானேஜிங் புரோப்ரைட்டர்,
மீனலோசனி அச்சுக்கூடம்,
தெற்குக்கோபுர வாசல் தெரு, மதுரை.

அருணகிரி:—

இது பல்லடத்திலிருந்து திருவாளர் சி. ராம இராமநாதன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு சிறப்பாக செங்குந்த மரபினர்முன்னேற்றக்கருதியும் பொதுவாக நாட்டு நலங்கருதியும் வியாழக்கிழமைதோறும் வெளிவரும் ஒருவாரப்பத்திரிகையாகும்.

சந்தாவிபரம்

உள்நாடு வருடசந்தா ரூ. 4—0—0
வெளி நாடு ,, ரூ 5—0—0

மானேஜர்,
"அருணகிரி" பத்திரிகாலயம்,
பல்லடத்தார்,
(இராம நாதபுரம் ஜில்லா)

கோந்தர் குலதீபிகை:— இது செங்குந்த மரபினர் முன்னேற்றக்கருதி தமிழறிஞர் திருவாளர் காஞ்சி காசிலெங்க முனிவர் அவர்களை ஆசிரியராகக்கொண்டு காஞ்சிபுரத்தினின்றும் வெளிவரும் ஒரு திங்கள் வெளியீடு. செங்குந்தமரபினர் முன்னேற்றங்கருதி வெளிவருதாயினும் தமிழ் மக்கள் யாவரும் குறிக்கொள்ளத்தக்க பொருள்களும் இதில் வெளியிடப்படுகின்றன. இதன் ஆசிரியர் குழுவில் சக்கஅறிஞர்களிருக்கிறார்களாதலின் ஒப்பமுருவரும் ஆசரிப்பாராக.

மானேஜர்
செங்குந்தர் குலதீபிகை நிலையம்காஞ்சீபுரம்.

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" கேஷமநிதித் தர்ம பண்டு லாட்டரிச் சிட்டு.

சிட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சிட்டுகள் 33000க்கு 3381 பிரைஸ்கள்.

1-வது பிரைஸ் ரூ. 3000. 2-வது பிரைஸ் ரூ. 1500. 3-வது பிரைஸ் ரூ 1000. 4வது பிரைஸ் ரூ. 500, 5, 6-வது பிரைஸ் ரூ 250.

100 ரூபாயில் 5 பிரைஸுகளுக்கு ரூ. 500, ரூ 50ல் 20க்கு ரூ 1000, ரூ 20ல் 50க்கு ரூ. 1000, ரூ 10ல் 100க்கு ரூ 1000, ரூ. 5ல் 200க்கு ரூ 1000, ரூ. 3ல் 600க்கு ரூ. 1800, ரூ. 2ல் 2400க்கு ரூ. 4800. ஆக பிரைஸ் 3381க்கு ரூ. 17500, புக் 1500க்கு கமிஷன் ரூ. 3000 குமாஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ. 1800, தனிப்பிரைஸ் ரூ 1700, பண்டுக்கு ரூ. 9000 ஆக ரூ. 33000

1, (4—5—1927) பிரபவ-ஹூ சித்திரை-மீ 22-உ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப் பெறும்.

2. 33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையாகுமாயல் சுவப்படி பண்டுக்கும் செலவுக்குமேபோக மீதித் தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் சுவப்படி குறைக்கப்பெறும்.

3, 1-வது பிரைஸ் முதல் 6-வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4. பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை அனுப்பப்படும்.

5. சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ரூ. அ. முத்துசாமி நாட்டார் பத்திராதிபர், "நாடார்குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சு. ஆ. முத்துசாமி நாடார், பத்திராதிபர்.

காமகற்பம்.

தாதுபுஷ்டிக்கு மிக்க உயர்ந்தது.
அனுபவத்தில் அறியலாம். விலை ரு. 1-தான்.
S. K. வரதராஜலு நாயுடு,
கமிஷன் ஏஜண்டு, திருச்செங்கோடு. (S. I)

[4ம் பக்கத் தொடர்ச்சி]

அம்பட்டர் குருக்கள் எனப்பெயர் வைத்தனர் அம்=அழகிய, பட்டர்=பார்ப்பனர் இவர்கள் தமிழ் நாட்டு புரோகிதர் ஆயினமையால் "அம்பட்டர்" என அடைமொழியுடன் வழங்கலாயினர். தமிழ் நாட்டில் பல வகைப்பிராமணர் இருக்கின்றனர். உதாரணமாக சிலர் விசுவகர்மப்பிரகமணர்கள் என்றும் கொங்கணி பார்ப்பனர்கள் என்றும் சிலர் சௌராஷ்டிர பிராமணர்கள் என்றும் சிலர் ஸ்மார்த்தப்பிராமணர்கள் என்றும் சிலர் வைணவப் பார்ப்பனர்கள் என்றும் சாத்தாத ஸ்ரீ வைஷ்ணப் பார்ப்பனர்கள் என்றும் குருக்கள் பார்ப்பனர்கள் என்றும் கம்பூரிரி பார்ப்பனர்கள் என்றும் பல பார்ப்பனர்கள் இருப்பது போலவே அம்பட்டரும் உண்மையில் ஒருவகைப்பார்ப்பனக்குலத்தவராவர். அதனாலேயே தான் பட்டர் என்கிற பெயர் எற்பட்டிருக்கவேண்டுமே அல்லாமல் வேறில்லை.

தெனாலி இராமன்காலத்தில் ஓர் கதை கேட்டிருப்பீர். என்னவெனில்? கருப்புநாயை வெள்ளை நாயாக்கினது. இக்கதையை வேடிக்கையாவும் விளையாட்டாகவும் பேசுவர். அரசன் நாவிதனைப் பார்ப்பன் செய்ததற்காகக் கருப்பு நாயை வெள்ளை நாயாக்கின தென்பர் அதாவது:— நாவிதர் பார்ப்பனர் ஆகமாட்டார் என்பதாம். ஆனால் இதன் உண்மை அங்ஙனமன்று. அக்காலத்திருந்த அரசன் நாவிதா என்னும் பிறப்பின் பெருமையில் பெரிதும் உணர்ச்சிகொண்டவன். அவர்களை உண்மையான அமபட்டர்:-பார்ப்பனர் ஆக்கவேண்டுமென்று முயன்று பல ஆயிரம் பேர்களை அங்ஙனம் செய்வித்தனன். இவ்வாறு பார்ப்பனரான அமபட்டப்பார்ப்பனர் பலர் இருக்கின்றனர். அவரைத்தம்பிடிப்பார்ப்பான் என்றும் சொல்வர் அத்தம பிடிகள் ஆரியப்பார்ப்பனரும் ஆகாமல் தமிழ்ப் புரோகிதர் அம்பட்டரும் ஆகாமல் திரிசங்கு சுவர்க்கத்திலிருக்கின்றனர். இங்ஙனம் நாவிதர் பார்ப்பனர் ஆயினதைப் பொறுக்காமல் அதைப் பொய்ம்மையாக்கக்கற்பிக்கப்பட்டதே கருப்பு நாயை வெள்ளையாக்கினகதையாகும். தெனாலிராமனும் பார்ப்பனன் எனபதை மனதில் வைத்துகொள்க.

ஆனால் இங்கு ஒன்று வினவலாம் என்னை? மயிர்களைதல் தொழில் செய்யும் நாவிதன் அம்பட்டன் எங்ஙனம் பார்பபனன் ஆவான் என்பதாம் குலத்தினுல் பிறப்பில் உயர்வு தாழ்வு என்பது ஆரியர்கள் வந்தபின்னரும் அவாகளின் மாயவலையில் சிக்கியபின்னரும் நமது தமிழ் நாட்டில் தோன்றியதே யன்றி பழங்காலத்தில் தமிழ் நாட்டில் பிறப்பினுல் உயர்வு தாழ்வில்லை என்பதை அனைவரும் அறிவர். பண்டைக்காலம் குணம தொழில்களால் குலங்கள் பிரிக்கப்பட்டன. அவ்வாறுகும்பொழுது ஓர் குலத்திலே அந்தணர், அரசர் வணிகர் பணிசெய்வோர் எனப்பல பிரிவினர் இருக்கலாம். இங்ஙனம் ஒருவயிற்றில் பிறந்த உடன்பிறந்தார்களிலும் இருக்கலாம். மேல் நாட்டில் உடன்பிறந்தார்களுக்குள் ஒருவன் குருவாகவும் மற்றவன் அரசனாகவும் பிறன் வாணிகனாகவும் ஏனையோன் பணியாளனாகவும் இருப்பதை இன்றும் காண்கின்றோம். அத்துணையேன் நமது நாட்டில் ஆரியப்பார்ப்பனர்களுக்குள்ளேயே அங்ஙனமிருக்கவில்லையா? ஒரு பார்ப்பனன் குருவென்றும் காணிக்கைவாங்க வருகின்றான்; ஒருவன் உத்தியோகன்—அரசன் என்று இலஞ்சம் கேட்கவருகின்றான் ஒருவன் விபாபாரியென்று கொள்ளையடிக்க வருகின்றான். ஒருவன் சமையல்காரனாகவந்து எச்சில் இலை எடுக்கின்றான், ஒருவன் தூதுவனாக இருக்கின்றான். இன்னோர் அனைவரும் பார்ப்பனர் ஆனபொழுது நாவிதர் பார்ப்பனர் ஆகமாட்டாரா? இன்னும்பார்ப்பனன் மயிர்களைதல் தொழிலாகியகாளிகத்தொழில் செய்கின்றான். தோல்வியாபாரமாகிய சக்கிலியத்தொழில் செய்கின்றான். வாத்தியம் வாசித்தலாகிய கட்டுவத்தொழில் செய்கின்றான். இத்தனையும் செய்துகொண்டு தான் பார்ப்பனன், உயர்ந்தவன் என்கின்றான். நாழும் காலில் விழுகின்றோம்; அழுகின்றோம். அக்கோ! என்னே! அநியாயம்! அநியாயம்!!

அம்பட்டர்களின் மற்றைய பெயர்களின் காரணங்களும் வரலாறுகளும் எழுதின் மிகவும் விரியும் ஆகையால் அம்பட்டரும் ஓர் காலத்தில் உயரிய நிலையில் சிரிய தொழில்—புரோகிதத் தொழில் செய்து வந்தனர் என்பதாம்.

அம்பட்டரே! பழந்தமிழ்ப் புரோகிதரே!

உங்கள் பண்டைக்குலத்தின் பெருமையைக்கருதியுங்கள். உங்கள் புரோகிதத் தொழிலைப் பெரும்பாலும்பார்ப்பனன்பறித்துக்கொண்டான். மயிர்களைதல் தொழிலையும் தன் மட்டில் பார்ப்பனன் பார்த்துக் கொள்ளுகின்றான். மயிர்களைதல் தொழிலிலும் பெரும்பணம் வருமென்றிருந்தால் வெளிப்படையாக அனைவருக்கும் சுதேசமாம செய்வான். ஆதலால் உங்கள் மயிர்களைதல் தொழில் பார்ப்பனராலும் மற்றைய செட்டியார், நாயுடு, கவுண்டர், பிள்ளை, முதலியார் முதலானவரால் கவரப்படுமென்பதில் ஐயமில்லை. அம்மயிர்த் தொழில் போனால் போகட்டும் உலகில் எத்தொழிலையும் ஆண்டவன் படைப்பிற்கு வேறுபாடின்றிச்செய்யலாம். மகாத்மா காந்தியடிகள் மயிர்களைதல் தொழில் செய்தார். வண்ணன் தொழில் செய்தார். அடிகள் அந்தணராக அமர்ந்துள்ளார்; துறவியாகத் தோன்றியுள்ளார் கடவுளர்க்கு நாட்சியளிக்கின்றார். ஆகையால்தொழிலைப்பற்றி என்ன! என்ன! பழங்காலத்திலிருந்தே புரோகிதத் தொழில் செய்யும்பார்ப்பனராக இருந்தேவருகின்றோமென்பதைத் நிடமாகக் கொள்வீர்களாக. நீங்கள் பழைய பெருமையினின்றும் இழிந்தமைக்கு உங்கள் ஒழுக்கங்களேயாம். அவற்றைச் சொல்வதால் கோபங்கொள்ளற்க; அன்புடன் கேட்க கேட்க.

சிவனே அம்பட்டப்புரோகிதரே!

நீங்கள் குலத்தின் உயர்விற்காக ஒன்று கூடல் வேண்டும்; பல சங்கள் சேர்த்தல் வேண்டும்; உங்கள் குலத்தினரை உயர்வு செய்வதற்காக கோயமுத்தூரைச்சார்ந்த உப்பிலிபாளையம் செல்வர் திருவாளர் ஆர்.வி. இலட்சுமைய நாயுடு அவர்கள்ஏக்கர்தோட்டம் கொடுத்துள்ளார்கள். அதில் ஸ்ரீ இராமலட்சுமண மங்களாசிரமம் என ஓர் சங்கம் சோக்ககப்பெற்றுள்ளது. அச்சங்கத்தை முன்னேறச்செய்வதற்குக் கம்மவார் குலத்தின் தேசீய ஒழுக்கப்பார்ப்பனர் ஸ்ரீமான் இராமசாமி நாயுடு என்பவர் மிக முயன்று வருகின்றார். பல அம்பட்டர் அதில் சேர்ந்து கிருப்பாவை சேவித்து பஜனை செய்து உயர்ந்த ஒழுக்கமுள்ளவராகி வருகின்றனர்

அச்சங்கத்தின் சிறந்தவிதிகள்:— காவிதர் ஆடி அறுக்கும் தொழிலாகிய கொலைத்தொழிலும், மது உண்ணலாகிய புலைத்தொழிலும் விட்டுவிடல் வேண்டும் என்பதாம். இங்ஙனம் விட்டு ஒழுக்கத்தில் உயர்ந்த உப்பிலிபாளையம் அம்பட்டர் ஆண்மக்கள்பெண் மக்களுக்காக ஆண்டுதோறும்உண்டாகும்மகிழ்ச்சிக்கு அளவின்று. அடியேனும் அவ்வாசிரமத்திற்குப் போகின் பண்டிதன் என்பதற்கு அம்பட்டர் உரிமைகொண்டு மகிழ்வேன். குலாவுவேன். அவ்வாசிரமத்தில் அம்பட்டரும் மற்றைய குலத்தினரும் வேற்றுமையின்றி சமபந்தியாக உண்பதுண்டு. இதுகாலை அம்பட்டர் கைக்கொண்டுள்ளகொலைத்தொழிலும் புலைத்தொழிலும் தவிர்த்து உண்மை அம்பட்டர் ஆதல்வேண்டும். ஒழுக்கத்தினாலேயே உயர்குலம் என்பதை அம்பட்டர் காண்பித்தல் வேண்டும் பூணூப்பக்கமுள்ள மருத்துவர் சங்கத்தார் தங்களைப் பிராமணர் எனத்தீர்மானித்திருக்கின்றனர். இது காலை தாழ்ந்த குலத்தினர் பக்கமே பகவான் இருக்கின்றார். இதற்குச்சான்று மகாத்மா காந்தியடிகளாவர். அம்பட்டர் ஊக்கமும் உறுதியும்கொண்டு முன்வந்து ஒழுக்கத்திலும் அறிவிலும் உயர்ச்சி பெறுவார்களாக. ஒழுக்கமே உயர்குலம் உணர்க! உணர்க!

கூட்டுறவு சங்கம்.

1. கூட்டுறவு சங்கம் எற்படுவது எனன?
2. அதனுடைய நன்மைகள்
3. அதனுடைய பலாக்கள்

இந்த மூன்று தலை அங்கங்களையும் வைத்துக் கொண்டு தமிழில் ஒரு வியாசம் (Foolscap Size) அரை காகிதத்தில் அச்சில் அடங்கக்கூடியதாக யாராகிலும் எழுதி அடியில்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைல் வெகு நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

நாயதரசி, கூட்டுறவு டவுன் பாங்கி, ஆம்பூர்,

தாய்மார்கள்.

கவனிக்கவேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் சவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டுவருகிறது. 20 வருடத்து அனுபவம். எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுபவக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பிவைக்கப்படும் இதன் விலை தபாற் செலவன்றி ரூ. 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:—காத்துக்கருப்பு விஷயத்திற்கும் தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகித்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்தரீக டாக்டர்
இரும்தார் வீடு
சின்னகடைத்தெரு, தெப்பகுளம், திருச்சி.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

ங்களின் தேசபாஷையில் பேசி எளியோருடன் கலந்து வாழவேண்டி சிங்காசனத்தைத்துறந்தவர். இரண்டாவது ராமரே என்னும்படிச் சண்டாளரையும் அன்பால் மார்புறத் தழுவியவர்—நீதி மார்க்கத்தை அவரைப்போல் அவ்வளவு தைரியமாய் இவ்வுலகத்தில் வேறெந்த மகா புருஷனும் பிரசங்கிக்க வில்லை. ஆனால் அவர் பிரசனம் செய்ய உயர்ந்த உண்மைகளை அநுசரிக்காமல் ஆரியர் கூட்டத்தில் வந்தடைந்த கல்வி கலமற்ற பல ஜாதிக்காரர்களும் இரக்கமில்லாத ஆசாரியர்களும் சில காலத்திற்குள் தங்கள் பாபபுகளையும் பூதங்களையும் பல பல னற்ற கிரிபைகளையும் அதிக ஆசாரங்களையும் கொண்டுவந்து விடவே பரத கண்ட முழுவதும் அதி கீசமான மூட பகுதிப் பின்டமாய்ப் போய்விட்டது. அந்த புத்த பகவானின் உபதேச மொழியின் ஒரு பாகம் சென்ற இடமே ஐப்பான். அத்தேசம் இருகுகும் உயர்வு உங்களுக்குத் தெரியும்.

பினனும் கம்மை விடவல்ல பகவான் தன் கிஷ்ய பாபயையில மகா தேஜஸ்வியாகிய ராமானுஜர் என்பவரை நம்மிடமனுப்பினர் அவருடைய திருதயமோ கருணாகரமனலாய். அவர் தினர்களுக்கிரங்கி அவர்கள் நிலையைக்கண்டு பரிதவித்தார். கல்மஷம் மூடியிருந்த கர்மாணுஷ்டானங்களைக் கூடியவரையில் சுருக்கப்படுதியும் விதியாசங்களைப் போகியும் ஜனங்களின் குறையைத் தீர்த்தார். அன்றியும் அவர் மோக்ஷத்துவாரதனைப் "பிராமணனுக்கும்" "பறையனுக்கும்" பேதமின்றி திறந்து விட்டார். அவரையும் நாம் கேட்காமல் அவருக்குப் பின் அதிக அறிவிலாத விதியாசங்களை ஏற்படுத்திக்கொண்டோம் இவ்வளவையும் பொறுத்தார் பகவான். பொறுத்தும் கடைசியாக உண்டு உதித்தின நன்மையாக காண்பிக்க என்று சொல்லும் படியாய் நம் பேரில் இரக்கங்கொண்டு தயவை கையாகிய வலை மதத்திற்கும் பொதுவாய் எல்லா ஜனங்களுக்கும் நன்மை செய்யக் கருணைத்தேயிற் கூடிய சுருபமாய் மகாத்மா காந்தியென்னும் பேரோடு கூடிய ஒருவரை அனுபபி நுகிறார்—அவர் "கொடுமையிலும கொடுமையான தீண்டாமையை ஒழியுங்கள் இல்லையேல் நீங்களும் உங்கள் மதமும் அன்பு அற்று ஒற்றுமை கெட்டு அழிந்து போவீர்கள் ராடை சுற்றி நூல் நூறு கதர் கட்டுங்கள். இலலையேல் காட்டில் பட்டினி மரணம் நீங்காது. மனித தர்மம் விளங்காது. பிரமையினால் உண்டான விவேகமற்ற நாகரீகம என்னும் அநாகரீகம் தொலயாது. வயிற்றிற்கு கஞ்சியில்லாமல் வாடும் உங்கள் ஜனங்களின் வாட்டத்தை மாற்ற வேறு மருந்திலலை. பசியாலும கொடுமையாலும் ஜனங்கள் படும் பாட்டைப்பாருங்கள். இந்தப் பாவமும் பழியும் வந்து தான் உங்கள் நாட்டையும சமூகத்தையும் அல்லல்படுத்துகிறது. என்வார்த்தையைப் பின்பற்றி நட தீர்களானால் நம் நாட்டைவிட்டு ஓடிப்போன நம் பாக்கிய லட்சுமிகளைக் கொண்ட தெய்வங்கள் எல்லாம்தானாகவே இங்கு திரும்பவும் குடிவந்து விடும்" என்று உபதேசிக்கிறார். (தொடரும்)

ஈரோடு

அருங்கலை விநோதரும், மாயாவாத தும்பைகோளரியும், விசிட்டாத்வைத பிரபல நியாய துரந்தரருமாகிய

ஸ்ரீமான் ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்களின் முத்த மனைவியார்

ஸ்ரீமதி பெரிய நாகம்மாள்,

1—2—1927-ல் தேகவியோகமடைந்த செய்திகேட்டுச் சொல்லிய

இரங்கல்-பாக்கள்.

அருமையே மிகநிறைந்த பெருமபண்புஞ் சத்துவமே அமையத் தாங்கிப்
பெருமையே பரிணமித்து நிறைஞான வொளிப்பிழம்பாய் பிறங்கி நிற்கும்
உரிமையே பெற்றுயர்ந்த கிருட்டினப்பே ரையரின் னுயர்சீர்க் கற்புப்
பெரியநா கம்மாளுப் பெற்றுலக உடம்லழித்தா ரெனக்கேட் டோமே, (1)

பாவுக்கே மனபவிரும்பிச் சென்சாய்க்குந் நிருவாளப் பண்பா இந்தச்
சாவுக்கே யாருகடி தந் தாமல் மறற்கதுவுக் கதுதி யாமா?
காவுக்கே பெருந்தலகமைச் சாதலெனப் புகழ்ந்துரைஞ் சதுரா, கல்ல
பூவுக்கே மணமுண்டு நாருக்கம்-தில்லெனப் புகலல் உண்டோ? (2)

நில்லாத இவ்வுலகப் பொருள்களால் இடருழந்து நிற்பர் பல்லோர்
இல்லாத பெருஞ்பேற்றை யெண்ணியெண்ணி மனமாழ்கி யிருப்பார் பல்லோர்
அல்லாத பொருள்களின் மேல் அவலியாய் நெஞ்சுருகும் அனித்த வாழ்க்கைப்
பொல்லாத தென்றெண்ணிப் புதுந்தணீரா வின்னுலக புனித மென்றே. (3)

வினவயகத்தில் திழுத்தாளும் மெய்ப்புதலாம் ஐப்புலனின் எவல் கேட்டுத்
தினவயத்துக் கொன்றில்லா தாகநிற்ப துந்சாயின் தூர மென்பார்
மனவயகத்து வகதிவங்கீசார் மனபுவப்பத் தாமென்ற வளம்பூண் டுள்ளார்
வினவயகலைத யார்தடுத்து மெற்செய்ய வல்லவர்கள் விதித்த லொன்றே. (4)

துறந்தலவு நலத்தோருக் கற்பாயு ளாய்த நிங்கே நிட்டி யாளும்
மறந்தலவு பாவியக்கோர் வருமாயு னிட்டிலைக்கும் வழக்கதை கண்ட
நிறங்குலவும் அந்தகனீ நீதிகொண்ட தருமமென வுலகம் போற்றல்
கறங்குலவு விடஅரவை கல்லாவாக் கழற்நிற்ப துங் கண்டோ லொன்றே. (5)

ஆனலுங் கைமுழுவி யகன்றசெயற் தளக்கவல்ல யடைய லாமோ
போனலும் வந்தாலும் விணையளவு செயலெலயதும் புதிதொன் றில்லை
தேனலும் அழுதாலுந் செய்தவினை யெனமொழிய தெரிந்து பேசிப்
பாநாலுங் கேட்டுவந்து சொல்லுக்குப் பொருளாழும் பார்க்குமே நீயே. (6)

கற்பாழர் இளங்கொடியே காழ்த்துள்ளம் மலர்ந்துதுக் கனிந்த சொல்லாம்
பொற்பணமாத தேனிழுக்கிப் புண்ணியத்துப் பழம்போலப் பொலிந்து நின்றார்
அற்புதமாய் நின்றபெரு வீருந் தாம்பி வருவிருதின் அமையம் பார்க்கும்
விற்குவோ மதிபூத்த மெல்லியலும நலியவே வேண்டி ரால். (7)

பாற்கடலிற் பிறந்தவொரு பெண்ணமிர்தம் திருமாலின் பாலினுள்ளார்
தூற்கடலிற் பிறந்தவொரு சொல்லமிதம் ஞானவிநியின் பாலி னுள்ளார்
ஊர்க்கடலிற் பிறந்தவொரு மனியமிர்தம் உயர்பிரான் பாலி னுள்ளார்
நீர்க்கடற்பூ பிறந்தவொரு பெண்ணமிர்தம் நினைப்பிரிதல் நீதி தானே. (8)

ஆனதயா நிலைக்களமாய் மனங்கொண்ட பொற்கொடியும் அழுகத் தீஞ்சொல்
*தீனதயா, சம்பத்தை முத்தாடிக் கண்வளர்த்தத் திரும்பி யீண்டு
வானதனி லுள்ளசிறு விளையாட்டுப் பொருள்வாங்கி வருதற் காகும்
கானமதி அபர்ந்ததெனச் சென்றதுவுங் காரியமே தளர்த்தற் கின்றே. (9)

கால்விலங்கு தனைப்போல விணையிரண்டா மலையொழிக்கக் கருதா மல்லீர்
கால்விலங்கு தனைப்போல வுண்டுறங்கி வானுள்வீண் கடத்து மிந்த
மால்விளங்கு மண்ணுலக வாழ்வுபய னில்லையென மனங்கொண் டம்மை
மேல்விளங்கு விண்ணுலகம் விரும்பினரோ பெண்ணமிர்தம் வியத்த லொன்றே. (10)

ஆறுவது சினமென்ற அம்மைமொழி யறிந்தனர்நீ யென்மே லன்பு
கூறுபட வேறுவிதங் கொள்வதைமை அறநெறியோ கொளும்பேர் நட்பு
மாறுபட மித்திரபேதகமாக வருபவற்றை யனப்பு ளேபோல்
வேறுபடப் பிரித்துணரும் விதகநீ மனமகற்ற வேண்டு வோமே. (11)

* தினதயாளு நாயக்கரின் பெண் குழந்தை, சம்பத்குமார நாயக்கரின் ஆண் குழந்தை

குன்னூர், திருவருள் நிலையம், பாங்க்.
25-2-1927.

இங்ஙனம்,

N. ராமசாமி பிள்ளை.

ஆம்பூர் பிராமணரல்லாதார் வாலிபர் சங்கத் திறப்புவிழா.

வாலிபர் தலைவர், திரு ஆரியா அவர்களின் வருகையும் குதூகலமான வரவேற்பும்.

இதற்கு முன்னால் அறிவித்திருந்தபடி 28-2-27 தேதி மாலை 4-மணிக்கு ஆம்பூர் ஸ்வாமி விவேகானந்தா வாசகசாலை கட்டடத்திலிருந்து ஏராளமான ஜனங்கள் பாண்டு வாத்தியத்துடன் திரு. ஆரியா அவர்களை வரவேற்க ரயிலடிக்குச் சென்றிருந்தனர்.

சரியாக 4-20 மணிக்கு பெங்களூர் எக்ஸ்பிரஸ்வண்டியில் உயர் திரு. ஆரியா அவர்கள் வந்ததை கண்டதும் பொது ஜனங்களும் மாணவர்களும் குதூகலத்துடன் தலைவர்களுக்கு ஜெய் கோஷம் செய்தனர். தலைவர் அவர்களை இஜ்ஜில்லாவிலேயேமுதன் முதல் பிராமணீய சம்பந்தத்தை அறவே ஒழித்த திரு. வெ. மாணிக்க முதலியார் அவர்கள் வரவேற்றனர். தலைவரை ரயிலடியிருந்து பாண்டு வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டது. ஜனங்கள் கூட்டம் கூட்டமாக வந்து கலந்து கொண்டனர். வழிநெடுக பூமாலைகள் சூட்டி ஆரவாரம் செய்தனர். சரியாய் 5-மணிக்கு டி. வி. ஆர் சிவலிங்கையா அவர்களின் இல்லத்தில் ஒரு தேநீர் விருந்து கடத்தப்பட்டது.

குறித்த நேரத்திற்கு முன்பே கூட்டம் குழுமிவிட்டது. மாணவர்கள் பெருந்திரளாக வந்திருந்தனர். சரியாய் 5-30 மணிக்கு திருவாளர் வி. எ. கோதண்டபாணி முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் தலைவர் திரு ஆரியா அவர்கள் வந்திருந்தவர்களின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளையும் வாலிபர்கடனையும் விளக்கினார் பின்னர் வந்தே சங்கத்தின் நிர்வாக மெம்பர்கள் தேர்தல் நடந்து கூட்டம் இனிது முடிந்தது.

சங்க நிர்வாக்ஸ்தர் கிழ் கண்டவாறு:—

பிரஸிடெண்ட்:— திரு வெ. மாணிக்க முதலியார் அவர்கள்

வைஸ்பிரஸிடெண்ட்:—திரு. டி. வி ஆர். சிவலிங்கையா அவர்கள் 2கோதண்டபாணி முதலியார் அவர்கள்

பொது காரியதரிசி:—திரு லெ கன்னைய செட்டிகாரு

உதவி காரியதரிசி:— 1. திரு எட்வர்ட் சாமுவேல் 2 சங்கரய்ய நாயுடுகாரு

பொகிஷ்தார்:— திரு. முனிசாமி நாயக்கர் அவர்கள்

கீமிட்டி. மெம்பர்கள்:—

1, சீனிவாசலு நாயுடுகாரு அவர்கள் 2. சுந்தராஜ் தேசாய் 3. செங்கல்பட்டுசெட்டியார் அவர்கள் 4. மாணிக்க முதலியார் அவர்கள் 5 மரகதவேல் முதலியார் 6தங்கவேலு கவுண்டர் 7 எம். ஸ்ரீனிவாசலுநாயுடு அவர்கள் 8வெ.கோவிந்தராஜுநாட்டார் அவர்கள் 9முருகப்ப நாட்டாரவர்கள் 10 ஈ.வி. ஜலீல் சாயபு அவர்கள் 11 ச. ரத்தின முதலியார் அவர்கள் 12 எச். எஸ். சுகப்பா 13 அ. முதுசாமி முதலியார் அவர்கள் 14 எம். ரத்தினச்சாரி அவர்கள்,

28—2—27 இரவு 8-30மணிக்கு இவ்வூர் கடைத்தெருவில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 3000 ஜனங்களுக்கு அதிகமாகவே வந்திருந்தனர். கூட்டத்திற்கு திருவாளர் வெ. மாணிக்க முதலியார் தலைமை வகித்தார்.

திரு. ஆரியா பெருத்த காகோஷத்திடையே எழுந்து நிராவிடர்களின் பண்டை சிறப்பையும் இப்பொழுதிருக்கும் நிலைமையையும் புரோகிதக் கொடுமைகளையும் விளக்கி நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் ஜாதிக் கட்டுப்பாடு ஒழியவேண்டுமென்றும் புரோகிதர்களின் கொடுமைகள் மாறவேண்டும் என்றும் முன்னேற்ற மடைந்திருக்கும் பல நாடுகளும் இதேமாதிரி ஜாதிப் பிரிவினைகளையும், புரோகிதக்கொடுமைகளையும் தொலைத்தே இப்பொழுதிருக்கும் உயர்ந்தநிலைக்கு வந்தவைகள் என்றும் நிருவ்டாக்ஷத்துடன் விளக்கிக்காட்டி சுயராஜ்ஜியத்தைப் பெறுமுன் சுயமரியாதையை அடைவதுதான் சுயராஜ்ஜியத்திற்கு ஸ்திரமான அஸ்திவாரம் போட்டதாகும் என்றும் சுயமரியாதை பெறுவதும் சுயராஜ்யம அடைய முடியாதென்றும் எடுத்துக்காட்டி ஜனங்களை சுயமரியாதைப்பிரசாரத்திற்காக உடல், பொருள், ஆவி வேலைமையினும் தியாகம் செய்யத்தயாராயிருக்கும்படி யாசரித்ததும் தனித சுயராஜ்ஜியக் கட்சியின் அட்டூழியங்களையும் கூலிக்கு மாரடிப்பவர்களின் செய்கைகளையும் விளக்கிக் கூறினார்.

பின்பு சுமார் 12 மணிக்கு தலைவர் முடிவுரையும் வந்தேமாதரமும் கூறியபின கூட்டம் இனிது கலைந்தது. 1—3—27 மாலை பாசஞ்சர் வண்டியில் தலைவர் ஆரியா அவர்கள் சித்தூருக்கு பிரயாணமானார்.

நிணத்துக்கடவு.

சென்ற 5-3-27-ல் நிணத்துக்கடவில் அகில பாரத சர்க்கா சங்கத்தினர் உற்பத்தி சாலையொன்று கோயமுத்தூர் காங்கிரஸ் கதர் வஸ்திராலயம் மானேஜர் திரு கி. பி. விஸ்வநாத முதலியாரால் திறந்து வைக்கப்பட்டது. மேடி உற்பத்திசாலைக்கு மானேஜராக ஸ்ரீமான் ஸ்வாமி என்பவரை நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. மேடி சாலையில் தறி கார்களுக்கு வேண்டிய உதவி புரியுமாறு காங்கியடிகளின் உத்தரவாகும். மேடி சாலைக்கு ஆகவனித்து சிரமம் எடுத்துக் கொண்ட ஸ்ரீமான் சோழியப்ப கவுண்டர் அவர்களுக்கும் நிணத்துகிடவு ஸ்ரீமான் கணக்கப்பிள்ளை அவர்களுக்கும் இக்கிராமத்தார் கன்றி செலுத்தவுகடவு, சர்க்கா சங்க காரியதரிசி திருப்பூர் வஸ்திராலய மானேஜர், ஸ்ரீமான் விஸ்வநாதமுதலியார் முதலானவர்கட்கும் இக்கிராமத்தாராகிய நாங்கள் வந்தி செலுத்துகிறோம். ஸ்ரீமான் விஸ்வநாத முதலியார் தறிகார்களுக்கு சிற்சில மொழிகள் சொல்லி பூஜை மரியாதையானபிறகு ஸ்ரீமான் ராகவேந்திரராவ் என்பவரால் சிற்றுண்டி. வெற்றிலை பாக்கு வழங்கப்பட்டன. மேடி உற்பத்தி சாலைக்கு இவ்வூருக்கு புறத்திலுள்ள தறிகாரர்கள் போகவரவிற்குமாறு கடவுளை பிரார்த்திக்கிறோம்.

கிராமவாசிகள்.

முக்கிய அறிவிப்பு.

சந்தா நேயர்கள் தங்களது சந்தாத் தொகையை அனுப்பும்போதும், மாதம் எழுதும்போதும் சந்தா நெம்பரைக் குறிக்கவேண்டும். அப்படிக் குறித்து அனுப்பாத மாதங்கள் உடனே கவனிக்கப்பட மாட்டா.

மானேஜர், "குடி அரசு" ஆபீஸ்.

திருப்பூர் கத்தர் பனியன்கள்.

கைராட்டினை நூலினாலேயே தயார் செய்யப்பட்டது.



விலை நயமானது. சுத்தமேலானது

Trade **Mark**

28 இஞ்சு டஜன் 1க்கு	7—14—0	32 இஞ்சு டஜன் 1-க்கு	8—10—0
30 „	8—4—0	34 „	9—0—0

Registered.

உங்களுக்கு வேண்டிய சுத்த கத்தர் பனியன்களுக்கு எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள். ஒவ்வொரு பனியன்களிலும் கைராட்டினம் அடையாளம் இருக்கிறதாவென்று கவனித்து வாங்கவும். ஒரே கடகையில் ஒரு டஜன் பனியன்களும் அதற்கு மேல்கொண்டும் வாங்குபவர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர்:—

M. U. K. Khaddar Banian Works, Tirupur (S India.)

நமக்கேற்ற நவீனக நாவல் நாவலிற்சிறந்த நவீனக நாவல்

உங்கள் ஆர்டரை உடனே எழுதுங்கள்

அவரவரதிர்ஷ்டவசம் அறியலாமிதுநிஜம் ஆனந்த ரகசியம் அற்புத ஜோசியம்.

அனைவரும் படித்து அதிசயிக்கக்கூடிய

இரங்கூன் ரகசியம். ஓர் இனிய செந்தமிழ் நாவல்.

செந்தமிழ்ச் சகோதரர்காள்! எடுத்துப்படித்து முடிக்கும்வரை கீழேவைக்க மனமிராது. நாகரீகம், நவீனகம், புதினம், கற்பனை, கற்பிதம் முதலிய அலங்கிர்த மலைமந்தது. அறிவை விளக்கி அகமகிழச்செய்வது. மோசம் நாசம் கம்பளி வேஷம் போடும் வயிற்றுப் பிழைப் பாளரின் சாமர்த்தியத்தை விளக்கிக்காட்டுவது. அந்ய தேச ஜீவனும்ச கஷ்ட நஷ்டத் தின் பலனை போதிப்பது. சதிபதிகளின் சமுசார வாழ்க்கைத்தூணை நலம் சாற்றுவது. பேராசை பெருநஷ்டமென்னும் புத்தி புகட்டுவது மனதின் சஞ்சலததை நீக்கிச் சந்தோ ஷம் கொடுப்பது. மாயப் பரதேசிகள், வழிபறிக் கொள்ளைக்காரர்களின் வஞ்சகச் செயலை உள்ளங்கை நெல்லிக்கனிபோ லெடுத்துக்காட்டும் இன்றியமையாத இயல்புடைய முதல்தர மான நாவல். 200 பக்கம் அழகிய பிரிண்ட், அருமையான ராப்பர் பயிண்டு.

புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1—0—0. வி. பி, தபால் செலவு வேறு.

விலாசம்:—பஞ்ச சக்தி புத்தகசாலை,

தபால் பெட்டி P. நெ. 1051, 63, 29-வது கல்லி, இரங்கூன்.

மதன கோலாகல ரசமணி மாத்திரை.

மறதி, அசக்தி, சோம்பல் முதலிய கெடுதல்களைப் போக்கி தாது புஷ்டியை உண்டாக்குவதி லும், பசியை உண்டாக்குவதிலும் அபார சக்தி வாய்ந்தது. ஒரு மாத்திரையில் பரீட்சிக்கலாம். மாத்திரை 50-க்கு ரூ. 3÷12—0. 25-க்கு ரூ. 2—0—0. வி. பி. வேறு.

மானேஜர்:—ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை, திருச்செங்கோடு. (S. I.)

உமிர்க்குறுதி தரும் உயர்ந்த மாதப் பத்திரிகை எது?

நாட்டிலளம் கல்லும் நற்றமிழ் பத்திரிகை எது?

செந்தமிழ்ச் செல்வி ஐந்தாவது ஆண்டு.

தமிழ் மக்களுக்குப் பல துறைகளிலும் பயன் படும் சிறந்த மாதப்பத்திரிகை. வசன நடை மிக எளிது இதன் கண் பண்டைத் தமிழ் மக்களின் வரலாறு, பண் டைத் தமிழ் நாட்டின் வரலாறு, தமிழ்ப் பாஷை ஆராய்ச்சி, சைவசமய விளக்கம், பிறசமய கோட்பாடுகள், தமிழ் நூல் ஆராய்ச்சி, தமிழ் புலவர் வரலாறு, கலைத், உலகை மொழி, வியபபு மொழி, தமிழ் நாடகங்கள், கட்டுரை விளக்கப்படங்கள் கடவுள் படங்கள், அடியார் படங்கள், கோவில் படங்கள், பிற தமிழ் ஆங்கில பத்திரிகைகளிலுள்ள அரிய கட்டுரைகளின் சாரம் முதலியன வெளிவருகின்றன. நமது செல்வித் தொகுதி பிற்காலத்தில் அபிதான களஞ்சியம் (Tamil Encyclo paedia) போல் பயன படும். இதனை ஆதரிப்பது தமிழ் மக்கள் தனிப்பெருங் கடமையாம். மாதிரிப் பிரதியும், புத்தக விலைப் பட்டியும் இலவம்.

உள் நாட்டிற்கு ஆண்டு கையொப்பம்	ரூ.	4—0—0
வெளி நாட்டிற்கு ,, ,,	,,	4—8—0
திருவிளையாடற் புராணம் உரை மதுரைக் காண்டம் காலிக்கோ	,,	8—12—0
சமபந்தர் தேவாரம் படங்களுடன்		7—8—0

சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்,

306 லிங்கசெட்டித் தெரு, சென்னை.

இனம்! இனம்!! இனம்!!

ஜீவானந்த கைத்தொழில் போதினி

என்ற புத்தகத்தைப் பார்த்தீர்களா? இல்லையானால் இன்றைக்கே 0—8—6 அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும். இதில் பன்னீர் சோப், ஊதுவத்தி, வாசனை சோப், பரிமள ரோஸ் பற்பொடி. அஞ்சனம் இவ்விதமான அபூர்வ 8 முறைகளடங்கியிருக்கின்றன. கொஞ்சம்பிரதி களே அச்சிட்டிருப்பதால் உடனே மூர்துங்கள்.

விலாசம்:—S. V. இராம்தாஸ் நாயுடு,

கைத்தொழில் புரொபஸர்,

செம்பொன்னூர் கோவில் (S.I.R.)

பிடமரமாக்ஸ் லேட்.

லேட்கள், மாண்டில், டேம், தனித் தனி சாமான்யாவும் விலையமாய் கிடைக்கும். கியாட்லாக் இலவம்.

ஸன் கம்டெனி, தஞ்சாவூர்.

நமது அச்சுக்கூடத்தில்

பலதிறப்பட்ட ஜாப் வேலைகள் அழகாகக் குறித்த காலத்தில் செய்துதரப்படும்.

மானேஜர்:—

உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

குடி நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையாரால் மாதம் இருமுறை கத ரைப்பற்றி மாத்திரம் எழுதப்பட்டுப் பிர சுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய கதர்ப்பத்திரிகை.

ஏழை மக்களும் படிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு வருட சந்தா ரூபாய் ஒன்று அல்லது 8000 கஜம் கைநூல் என்று தீர்மா னித்திருக்கிறது.

சந்தாவை முன்னதாகவே அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்புவதில்லை. இதை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.

திருப்பூர்

சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினு சுகள், தாவணிகள், சங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையை யும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டி யார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணி களையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

நூதன ஜர்மன் எலக்டிரிக் விளக்கு.



இதை மேஜையின் பேரி லும், சுவற்றிலும், வைக்க லாம். இராத திரியில் படுக் கையிலிருந்தபடியே விளக் கை இதில் கண்ட கயிற் றின் (wire) உதவியாலீ எரியவும் நிறுத்தவும் செய் யலாம். புயற்காற்று அடி த்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப்பறித்துக் கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திராளானஜனங் கள் அதிசயத்தைப்பார்க்கக் கும்பலாகக் கூடி விடுவார்கள், மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய் தனுப்பபடும். குறைந்த விலை ரூ. 4—8—0 தபால் செலவு 0—8—0.

பாரீஸ் எம்போரியம், ஜி. டி.

மதராஸ்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.